# ஞானசௌந்தரி நாடகம்

(இரண்டு பாகங்களும் அடங்கியுள்ளன.)

இவை

மதுரை ஜில்லா, எரசக்கநாயக்கனூர் ஜமீன்,
மகா-ள-ள-ஸ்ரீ கனம் பொன்னம்பலக் கவிராயரவர்கள்
மரபினரும் வித்துவான் ஸ்ரீமத் கனம்
ச. திருமலைவேலுக் கவிராயரவர்கள் மருமகனுமான

**Mr. G. W. பொன்னுச்சாமி பிள்ளை அவர்களால்**

இயற்றப்பெற்று

மதுரை, பொன்னகரம், முனிசிபல் கவுன்சிலர்
மகா-ள-ள-ஸ்ரீ கனம்
K. ஷண்முகம் பிள்ளை அவர்கள்
முயற்சியால்

மதுரை
தமிழ்ச்சங்கம் பவர் பிரஸில்
பதிப்பிக்கப்பெற்றன.

[ரிஜிஸ்டர் செய்தது.] 1921. [விலை அணா 6.

MADURA TAMI...
நூல் ...
தமிழ்ச் ...
கா. கா...

# ஞானசௌந்தரி நாடகம்

(இரண்டு பாகங்களும் அடங்கியுள்ளன.)

இவை

மதுரை ஜில்லா, எரசக்கநாயக்கனூர் ஜமீன்,

மகா-ள-ள-ஸ்ரீ கனம் பொன்னம்பலக் கவிராயரவர்கள்

மரபினரும் வித்துவான் ஸ்ரீமத் கனம்

ச. திருமலைவேலுக் கவிராயரவர்கள் மருமகனுமான

**Mr. G. W.** பொன்னுச்சாமி பிள்ளை அவர்களால்

இயற்றப்பெற்று

மதுரை, பொன்னகரம், முனிசிபல் கவுன்சிலர்

மகா-ள-ள-ஸ்ரீ கனம்

K. ஷண்முகம் பிள்ளை அவர்கள்

முயற்சியால்

மதுரை

தமிழ்ச்சங்கம் பவர்ப் பிரஸில்

பதிப்பிக்கப்பெற்றன.

ரிஜிஸ்டர் செய்தது.] 1921. [விலை அணா

# சாத்துக்கவிகள்.

எரசக்கநாயக்கனூர் ஜமீன் வித்துவான்

ஸ்ரீமத்: கனம்

## ச. திருமலைவேலுக் கவிராயரவர்கள்

இயற்றிய

### ஆசிரியவிருத்தம்.

தேனமுதம் போன்மதுரஞ் சிறந்ததமிழ்க் கலைபலவுந்
தேர்ந்தோர் மெச்ச
ஞானசவுந் தரியெனுமோர் நாடகத்தை வரைந்துமிக
நயந்து பின்னர்த்
தானதனை யெழுதாவக் கரத்திலிட்டு விளக்கியிந்தச்
சகத்தின் மேன்மே
லானபெரும் புகழ்படைத்தா னன்னவன்யா ரெனிற்புலவி
ரறையக் கேண்மின்—
அன்பினுடன் மாவிரண்டா லென்னையழைப் பவன்றமிழ்நூ
லனைத்து நாளுந்
தன்பெயரின் முதன்மொழியைப் போலினிது போற்றுமிரு
தயத்தான் மிக்க
வின்புறுசத் தியமொழியா நயமொழியா னிவ்வுலகத்
திறைஞ்சுந் தொண்டர்
துன்பறவன் தருள்பாலனைத் துதிசெய்பொன்னுச் சாமியெனுஞ்
சுகுணன் மாதோ—

---

# ஞானசௌந்தரி நாடகம்.

### நேரிசை வெண்பா.

சற்குண மெஞ்ஞான சவுந்தரி விலாசமதை
நற்குணமா யிப்பாரில் நவிலுதற்கு—சொற்குணமே
தாதா நீயேசு சமஸ்தான்ம கோடிகட்கும்
நாதா வுனைப்பணிந்தேன் நான்

### தேவமாதா தியானம்.

பாண்டியன் ஈன்ற மீனாட்சி என்ற மெட்டு.

தேவனை ஈன்றமரிமா தா—நின்பாத
தெரிசனம் தாதா
தீவினை தீர்க்கவேமா தா—என்வாதா
துரிதமாய் வாவா
தம்பமென் றண்டினோர் துன்பங்களைப் போக்கித் தற்காக்க
வல்லதாயே
நம்புமுந் தன்புதல்வன் இன்பம் பெறத்தருணம் நல்குவாய்
கிருபைநீயே
நாதவே தாந்தரூபி யே—நற்சுசை
நாதர் தேவியே
ஞானகருணாகரி நானில தயாபரி நாசத்தூரில் வாசி
தீனசுகுணநிதி ஜீவதிரவிய வுதவி தந்தருள் நன்னேசி
சேவித்தேன் நானுந்தன் பணியே—நின்வயமே
தாவினேன் மணியே—தேவனை.

### சேசுநாதர் துதி.

மைகேசசபு ஜாயுரே என்ற மெட்டு.

தேசிகம்—ஆதி.

அதிரூப லா வண்யனே—இரங்கையனே
பரகதி மறந்து பாக்கியந் துறந்து
பாரிலேயே பிறந்த பரிபாலனே (இரங்)

மரியம்மை மகனே மகத்துவ சுதனே
மேய்ப்பராலேம கிழ்ச்சியுற்ற மைந்தனே (இராங்)

பஞ்சணைமெத் தையின்றி படுக்கநல் விடமின்றி
பாழுங்கந்தை யணிந்தபர வாசனே (இராங்)

அதிசய மானவா ஆயர்கட் கானவா
ஆசையாலே யவனிவந்த வானவா. (இராங்)

மன்னவன் தொட்டில் மாடடைக் கொட்டில்
மாட்சிமைமிக மொழிந்தான் பொன்னையனே (இராங்)

## திரியேகமூர்த்தி வணக்கம்.

தாதாபாய் நௌரோஜி என்ற மெட்டு.

வாவா காய் தெய்வீகா வாவாகாய்
பக்ஷமுடனெமை ரட்சிக்கயிக்ஷணம் (வாவா)

மூவரொன் றூனதிரு
மேசியா மனுடவுரு
மாட்சிமைகுன்றிடா முன்னணையிலருங்
காட்சியளித்த மன்னவனேயிங்கு (வாவா)

ஆதாமி னருபவ மறுக்கு மதிபனு யவதாரஞ் செய்தமா
தெய்வபாலா
எத்திக்கும் அகமகிழ்ந் தர்ச்சிக்கும் இகபர நவகுரு ஜெகஜோதி
யிம்மானுவேலா

பெத்தலேக மழ்பூச்செண்டே
சித்தருண்ட தேன்கற்கண்டே
போதனையறிந் துணர்ந்தோனும் பொன்னுச்
சாமிபாவிற் காயிசைந்து (வாவா)

## Scene No. 1.

### உரோமாபுரி தர்பார்—தருமராசன் தரு.

திரிலோகமும் புகழும்சுந்தா என்ற மெட்டு.

ஜெகநா தனே ஜெகப்பிரசக் கியாதனே
சேய நேய சாய லாயுள
மாய வாழ்வித்தரை மீதில்மாண்ட புண்யன்
மறைவடி விங்கிர்த சங்கீதக் காருண்யன்
மாக் களைமினவு மாஸ்திப
முழங்கிடுந் தொனியுட னுத்திர
நியாயமோதியநி யாயவோரைநர காக்கினைசெயுங் கண்யன் (ஜெக)

லே ஆகா பிராணநாதா அடியாளுனைப்பிரியேன்—இப்போ
அடவிசெல்ல விதியேன்
வசுவை யிழந்தவொரு பசுவைப்போ லாக்கவோ—எனக்
காதரதுணையிணையில்லாது செல்வது பொல்லாது பெருந்தீது
கூடநானும் ஞானும் வருவோம்—ஓதி
வாட வழியேதிப் போது.

தரு: சிச்சீ என்னமதி சற்றேநிதானித்துக்கூர்—மங்கை
செல்வளோ வேந்தனுடன்
சௌந்தரியைச் சீராய்ப் பேணிச்சுகங்காராய்—மனம்
போலவொரு குறையுஞ்செய்யாது வையாது தொய்யாது புடையாது
அன்னமமுதூட்டி வளர்ப்பா—யென்மாது
அன்னமே நான் சொன்னதைக் கேட்பாய்

லே: ஆகா உயிர்த்துணைவா செல்வீர் நயமுடனே—யாவும்
பார்ப்பேனன்பு மயமே
தட்டுமிட்டாய் லட்டுவட்டு ஜிலேபிதுட்டு—வகைப்
பட்டிலெட்டுடன் முத்திகொடுப்பேனே அடுப்பே
னே உடுப்பேனே கூடப்படுப்பேனே
கலங்காக் காடேகி வாரும்—ஐயனே
துலங்கும் பின் மகிழ் கூரும்.

தரு: மாதே! என் அருமைக்குழந்தையை நான் வருமட்டும் பத்திரமாய்ப் பாது காத்துக்கொள். நமக்குள்ள திரவியங்களிலெல்லாம் மேலானது இக் குழந்தை சுந்தரி ஒருத்தியே. நமக்கு ஒரே குழந்தை யென்பதையும் நன்கு அறிவாய். ஆகவே முக்கிய கவலையெடுத்துச் சொந்த அன்னை யைப்போல் பக்ஷமாயிருக்கவேண்டும்.

## லேனள் தரு.

### தாம்பூலமே தரித்துக்கொள்ளுவீர் என்ற மெட்டு.

1. சதா நாதா சந்தேக மென்வாதா
பெற்றவள் போலல்லோ உற்றேனென் ஞானத்தைப்
பற்றெனி லற்றதைத் தூற்றுவீர் சாற்றியே—சதா

2. அன்னமாடையி லேதுங் குறைவோ
என்னதான் எண்ணினீர் எங்கவழி பண்ணினீர்
சொன்னதா லென்மனம் புண்ணாகு தித்தினம்—சதா

லே: நாதா! இதென்ன மாதிரியாய்ப் பேசுகிறீர்கள்! ஞானத்துக்கு நான் இது வரை செய்த குறைவென்ன? என்னுயிரைவிடப் பதின்மடங்கதிகமாய்ப் பார்த்துவந்த என்மீது இவ்வாறு சந்தேகப்படலாமோ? நன்மைசெய் தும் மேன்மை யில்லையே! இரவிலுங்கூட ஞானத்தைப்பற்றிய கவலை யொன்றேதான் என் உள்ளத்திற் குடிகொண்டிருக்கும். நல்லதுசெய் வோர்க்கு உலகமே பொல்லாது.

தரு: பிராணசகி! மனம் வருந்தாதே! நான் என்ன பழியை இப்பொழுது உன் மீது சுமத்தி விட்டேனென்று வருத்தப்படுகின்ருய்? சுந்தரியை நன்கு கவனித்துக்கொள்ளும்படிதானே சொன்னேன். எப்படியிருப்பினும் பெற்றமனம் பித்தல்லவா? என் அருமைக் கண்மணி ஞானத்தை என் னேரில் வரவழைத்து அவளுக்குப் போர்ந்த ஆறுதலும் புத்திமதியும் சொல்லு. என்னைவிட்டுப் பிரிய அவளுக்கு மனமில்லை. கானகத்துக்கு என்னுடன் வர ஆசிக்கிருள்.

[லேனள் நயவஞ்சகமாய் ஞானத்தை உபசரித்தல்]

லேனள் தரு.

ஐமுலதஜாத்துபேதுமே என்றமெட்டு.

தந்தையோடெவ்வித மாரண்யமேகுவாய் தாயேதாயேதாயே
குட்டியெனைக் கிட்டிவாயேன்
நத்தியுனையணைத் தோர்முத்த மீகுவேன் தேனே மானே நானே
செல்வமேயுனைச் சீராட்டிப் பாராட்டுவேனிங்கே இங்கே இங்கே
அல்லும்பகல் உன்னலுவல்
அப்பனுக்கிப் போதடவி செல்லென்றுரை கண்ணே
பெண்ணே எண்ணே
பாலும்பழஞ்சோறும் பாயாசம் நாள்தோறும் ஈவேன் ஈவேன்
சிங்கமேஎன் தங்கமேவுன் [ஈவேன்
தாயாரிருக்கயேன் பேயாய்ப் பறக்கிருய் வேண்டாம்
வேண்டாம் வேண்டாம்.

லே: கண்மணி! நான் மலைபோலிருக்க உனக்கென்ன குறைவு? வேண்டிய தெல்லாம் உனக்குத் தருகிறேன். அப்பாவை அடவிக்கு அனுப்பிவிடு. கிட்டாதகனிக்குக் கொட்டாவிவிட்டால் முடியுமா?

## லேஞள் தரு.

பழனிமலேக்குமரேசனே என்ற மெட்டு.

காவடிச்சிந்து—ஆதி.

1. கிட்டாதகனிக்குவீண் கொட்டாவியைவிட்டென்ன
கட்டாயமுனேக்காடு கூட்டிப்போகார்விடு
பட்டுப்பாவாடையுட ஞெட்டியாணமுங்கட்டி
அட்டியலேமாட்டி பொட்டிட்டிருத்தல்கெட்டி

2. பள்ளியறைசென்று துள்ளியாடலேநன்று
அள்ளியுணவையுண்டு பிள்ளேயேபோகாயின்று
கொள்ளிவைப்பவளேயான் எள்ளளவும்பிரியேன்
தள்ளிடாதே தாயைத் தள்ளிடாதே

ஞா: அப்பா! கட்டாயம் போகவேண்டுமோ? பின்னேபோய்வாருங்கள். சீக்கிரம் வந்துவிட வேண்டும். வரும்போது ஒரு புலிக்குட்டி கொண்டுவாருங்கள்.

[தருமர் வேட்டைக்குச் செல்ல ஞானம் வீட்டினுட் புகுதல்.]

லேஞ: ஆகா! இச்சிறுக்கிக்கு இருக்கும் ஆணவமென்ன யாரிடத்திலிவள் வாலேயாட்டுகிறது? என்னிடத்திலா? அதுவும் லேஞளிடத்திலா? சரி பார்ப்போம் இவள்குறும்பை. மூதேவி இவளுக்கு நான் புழுக்கையா? பத்தா வருவதற்குள் சனியனேத் தொலேத்துத் தலேமுழுகிவிட வேண்டும்.

## லேஞள் தரு.

வேலேசெய்யாமலேயே சிறுக்கி என்ற மெட்டு.

தம்மிமெட்டு—ஆதி.

என்னுயிர் நாதனல்லோ—மூளியைத்
தன்னுயிர்போலயெண்ணி
அன்னமாடையளிக்கச் சொகுசுடன்
பன்றிபெருத்தாளுண்ணி

செல்வத்திலே செருக்குச் சண்டாளிக்குச்
செல்லப்பிள்ளே முறுக்கு
தொண்டனிடந்தருக்கம்—ஆடியதால்
கண்டடைந்தாளோ சொர்க்கம்

கீச்சுக்கீச்சென்றுகத்தி—கிழவி
பேச்சுப்போல் பேசுவாளே
வீச்சுஒருவிதமாம்—ஆனால்வெளிப்
பூச்சுப் பலவிதமாம்

கொழுத்துப் போனளடி—மூதேவி
கழுதையானளடி
யோசனை செய்வேனடி—மூதேவி
வாசனைவீசாமலே

லேன: சக்களத்திமகள் எனக்குச் சனியனாய் வந்துசேர்ந்தாள். சரி இருக்கட்டும் பார்ப்பேன் ஒருகை. அவள் செல்லமெல்லாம் அப்பனிடமல்லவோ காட்டவேண்டும். இப்பொழுது அவள் என்னசெய்கிறளென்று பார்த்துவருவோம்.

## Scene No. 3.

### சுந்தரி படுக்கையறை.

லே: அடிநீலி! சண்டாளி! பேஷ்! பேஷ்!! என்ன ஒய்யாரமான தூக்கம்.

### லேனள் தரு.

பரமானந்தமெய்ப்பர என்ற மெட்டு.

தேசிகதோடி—ஆதி.

என்ன ஒய்யாரமான தூக்கம் மெய்யான நோக்கம்
கன்னங் கைகா லுடம்பு வீக்கம் காண்ப தென்னக்கம்
இன்னுமே உன்னையே சின்ன பின்ன மாக்குவேனே
—சண்டாளியேநீ
சொன்னவேலை செய்தா லன்னமளித்திடுவேனே
—இன்றேல்மாண்டாயே
குலத்தைக் கெடுக்கவந்த கோடரிக் காம்பே
கலகத்தைக் கொடுத்திடுங் கருநாகப் பாம்பே
உலக்கைக் கனுந்துபோ லுறங்குதல் வீம்பே
கலகங் கிளப்பியுனைக் கொல்வதென் நோம்பே—என்ன
மெத்தைச் சொகுசுமொருகேடா மூளியடடா
சொத்துச் சொந்தமென்க வுன்வீடா சிற்றன்னைபாடா
உந்தனை நிந்தனை செய்வதென் சிந்தனைதானே
—ஊரார்நகைக்க
உதைப்பேன் வதைப்பேன் உயிருடன் புதைப்பேனே
—உறங்கும் நாயைக்

காலையிலாகட்டுங் கழற்றுவேன்வாலை
வேலைசெய்யாவிடில் வெட்டுவேன்காலை
மூலையிலொதுங்கிடத் தூக்குவேன்கோலை
சேலைகட்டி யோலைபூட்டிச் செல்வளோசோலை—என்ன

லே: அடி மூதேவி! (அடித்தல்) உனக்கெப்பொழுதும் இது தானோ வேலை! எழுந்திரடி! சனியன் நீ தொலைந்தாலல்லவோ என் குடும்பம் முன்னுக்கு வரப்போகிறது. கழுதை! உன் தூங்குமூஞ்சிமுகத்தில் விழிப்பதே தோஷம்.

[ஞானம் விழித்துட்காரல்]

ஞா: அம்மா! என்ன காரணம்! நீங்கள் என் என்னையிப்படி அடிக்கின்றீர்கள்? நான் என்ன குற்றம் செய்தேன்? ஐயோ நான் ஒரு குற்றமும் செய்யவில்லையே! என் என்மீது இவ்வளவு கோபம்?

## ஞானம் தரு.

தங்காவுனக்குயிந்த என்றமெட்டு

தேசிகமுகாரி—ஆதி.

ஏனோயென்மீதிற் கோபம் என்னதான்செய்ம தன்பாபம்
நானொன்றுமறியாப் பஞ்சைப்பாதகியானேன்—ஏனோ
அங்கம்பதறுதம்மா ஆவிதுடிக்குதம்மா
சங்காரப்புலிதனைச் சந்தித்தபூனையானேன்—ஏனோ
தாயில்லாக்குழந்தையம்மா தலையிற்தட்டாதீர் சும்மா
வாயில்லா ஜீவனைப்போல் வாதித்தலேற்காதம்மா—ஏனோ
பஞ்சணைமெத்தையிற் பாவி படுத்துநித்திரைசெய்ய
கொஞ்சமுங்கால்கூசாது நெஞ்சிலுதைக்கலாமோ—ஏனோ
கல்லுங்கரையுமம்மா குழந்தை கதறல்கேட்டு
அல்லலகற்றியெனை அன்பாயாதரியம்மா—ஏனோ

ஞா: சிற்றன்னையே! தாயில்லாக்குழந்தையை ஏன் இப்படி உயிரோடு வதைக்கிறீர்கள். சாப்பிடுவதையும் தூங்குவதையும் விட வேறெனக்கு என்ன வேலை. இதற்குத் தானோ தந்தையை வனத்துக்கு அனுப்பிவிட்டீர்கள்? அம்மா! தாங்களே எனக்குத் தஞ்சம்.

## லேனாள்தரு.

பாசுபதன்போலேமாரன் என்ற மெட்டு

1. நித்திரை விட்டெழுந்திரடி நீலியேவாடி மூதேவியேவாடி—நடு
மத்தியானமு மித்தொழில்தானோ என்னையேய்க்கவா எனக்
கெண்ணெதேய்க்கவா

2. வீட்டுவேலை செய்வாயடி நாட்டியக்காரி பெருந்தாட்டியக்காரி—இதைக்
கூட்டிப்பெருக்கித் தீட்டியரிசி மூட்டடிதீயை அடி மூடடிவாயை

3. தந்தையிடம் தளுக்குப்பண்ணித் திரிந்தாயேநாயே இப்போப் பிரிந்தாயே
பேயே—உன்
தந்திரமொடு மந்திரத்தையு மிங்குகாட்டாதே உன்வாலையாட்டாதே

லே: எண்டி பாசாங்குக்காரி! அழுகிறாய். உன் குறத்தனத்தை யாரிடம் காட்டுகிறாய். எழுந்திருந்து வீட்டு வேலைகளைச்செய். எருமைமாடுபோல் தின்கிறாயே ஒரு சட்டி. நாக்குக்கு உருசியாய்மாத்திரம் தின்னத்தெரியுமோடி தடிக்கழுதை! எழுந்திரடி! [அடித்தல்]

[படுக்கையைவிட்டெழுந்து வருதல்]

ஞானம் தரு.

நல்வாக்கு நீ கோடடி என்றமெட்டு.

சங்கராபரணம்—ஏகம்.

1. அம்மா யிது தர்மமோ அடிப்பதுதான் வர்மமோ
விம்மியழக் கர்மமோ வீங்குதையோ என்சர்மமோ
அடுக்குமோ அடுக்குமோ அடுக்குமோ

2. சற்றுமடிசகியேன் சிறிதும் வையச்சுகியேன்
பெற்றவளையிழந்தேன் சிற்றன்னையுனையடைந்தேன்
தஞ்சமே தஞ்சமே தஞ்சமே

3. கண்ணீர்வடியுதம்மா குழந்தை துடிக்குதம்மா
தண்ணீர் தவிக்குதம்மா தேகமேபுண் ணாகுதம்மா
தெண்டமே தெண்டமே தெண்டமே

ஞா: அம்மா! இப்படியடிப்பது உங்களுக்குத் தர்மமா? ஒருநாளும் ஒரு அடியாவது படாத என்னை இப்படி உயிருடன் வதைக்கலாமா? நான் என்னவேலை செய்யப்போகிறேன்? எப்பொழுதாவது வேலைசெய்த பழக்கமெனக்குண்டா? வேலைக்காரிகள் அநேகரிருக்க நான் என் செய்யவேண்டும்? வேலை செய்வது என் குலத்துக்கு இழிவல்லவா?

லே: பேஷ்! கழுதைகெட்ட கேட்டுக்குக் குலமொரு கேடா! எண்டி வேலை செய்வது குலத்துக்கிழிவா? உனக்குத்தானழிவு. வேறொன்றுமில்லை.

## லேனுள் தரு.

### தாயே சரஸ்வதியே என்ற மெட்டு.

இராஜ குலத்துக் கிழிவோ—உனக்கழிவோ

நாளைக்கு நாலுவேளை நாய்போல் நொறுங்கத் தின்றும்
வேளைவிருகம் போலுண்டும் வீங்குவதென்ன—இராஜ
கட்டையைப்போல யெந்தன் கட்டிலிலே படுத்து
ஒட்டைபோ லுறங்கிவந்த ஒய்யாரமென்ன—இராஜ
திண்டுமுண்டேது மில்லாத் தொண்டுழி செய்வாயடி
கொண்டகருத்தை விடடி கழுதைபோடி—இராஜ

லே: வாடி! சொகுசாகத் திரியலாமென்று நினைக்கிருய்? பிடியடி விளக்கு மாற்றை. சுத்தமாய் வீடு முழுவதும் கூட்டு. ஏண்டி தூண் போல நிற்கிருய்? (அடித்தல்) குனிந்து கூட்டடி தேவாங்கே!

ஞா: ஐயோ ஜெகதீசா! என்ன விதி யெனக்கு நேர்ந்தது. என்னைப் பெற்ற அம்மா நீ எங்கே இருக்கின்ருய்! என்னுடைய அலங்கோலத்தைப் பார்க்கின்ருயா? ஆ! என் அப்பா! என்னை இப்படி அவதிப்பட விட்டு விட்டுக் கானகம் செல்லலாமா? என் செய்வேன்! ஈசா! இது என் தலை விதியோ.

## லேனுள் தரு.

### பார்சி—ஆதி.

விளக்குமாறு பிடியடி விரைந்து சேலை கட்டடி
வழக்கமே பழக்கமே யில்லை யெனும் புகார் வேண்டாமே
கூடமாடங் கூட்டடி கூட்டிப் பெருக்கி யள்ளடி
ஓடவே யாடவே யிருக்கு மெண்ணந் தள்ளடி
குனிந்துமே நீபெருக்கடி குப்பை கூளம் பொறுக்கடி
கனிந்துமே பணிந்துமே கருத்தாய் வேலை செய்யடி.

## ஞானம் தரு.

### தெள்ளமுதே யென்ற மெட்டு.

விளக்கு மாறேந்திடக்கை விளங்குதில்லை ஐயோமிகை
விளக்கிடவே யாருமில்லை விலகிடும்வகை யேதொல்லை
கூடமாடங் கூட்டுகின்றேன் குப்பைசெத்தை யோட்டுகின்றேன்
வாடவிட்டனையோ தேவா வந்தவினை நின்று காவா
கண்களு மயறுதையோ கால்களுந் தளருதையோ
எண்ணமெலா மாறுதையோ என்மனதுஞ் சோருதையோ

ஞா: சிற்றன்னையே! சற்று என் கைகளைப் பாருங்கள். இரத்தம் கட்டிப் போய் விட்டன. உடம்பெல்லாம் வலிக்கிறது. நிமிர்ந்து நிற்க முடிய வில்லை. கஷ்டத்தோடு கூட்டி முடித்து விட்டேனம்மா! இனியாகி லும் என்னைப் பக்ஷமா யாதரிக்கக் கூடாதா?

லே: அடி நீலி! அதிக வேலை செய்து களைத்துப் போனவளைப் போல் பாசாங்கு பண்ணுகிறாயே! இந்த எத்துக்களெல்லாம் எங்கடி கற்றாய்? சரி இதோ இந்த நெல்லைக் குத்து.

ஞா: அம்மா! ஏன் என்னை உயிரோடு கொல்லுகிறீர்கள்? இப்பொழுதே எனக்குப்பாதி உயிர் போய்விட்டது. இனி இந்த நெல்லையும் குத்தும் படி சொல்வது உங்களுக்குத் தர்மமா? கூட்டும்போதே கைகள் இரத்தங் கட்டிப்போயின. இனியெப்படிக் குத்தமுடியும். பழக்கமுண்டா? அல்லது உலக்கைதூக்கப் பெலனுண்டா?

லே: குத்தடி குட்டியச்சுவரே! உனக்கு ஒரு கொள்ளை வரக்கூடாதா? வே ளைக்கு வேளை வான்கோழியைப்போல் கொட்டிக்கொள்ளமட்டுந் தெரி யுமா? கையில் வெண்ணையை வைத்துக்கொண்டு நெய்க்கலைவதுபோல் இத் தடிக்கழுதையை வீட்டில் வைத்துக்கொண்டு வேலைக்காரி என் வைக்கவேண்டும்? மரியாதையாய் விரைவில் குத்திமுடி. இன்றேல் இப்பொழுதே உதைத்துக் கொன்றுவிடுவேன்.

## ஞானம் தரு.

காசிநாதா இதுவுன் என்ற மெட்டு.

சாவேரி—ஆதி.

நெல்லுக்குத்துதல் தலைவிதியோ
தல்லியிருக்கிவிந்தத் தொல்லையுமுண்டோ
சல்லடை யுலக்கையான் தொட்டதுமுண்டோ—நெல்லு
காலைதுவங்கி வேலைசெய்ய
பாலையருந்திடாது சேலையுங்கட்டிடாது
ஆலையிலகப்பட்ட அடிக்கரும்புபோலானேன்—நெல்லு
அரிசியைத்தீட்ட வுமிநெய்யோட்ட
எரியுதையோகரம் வியர்க்குதையோசுரம்
சரிகுதென்மேற்பாவி யுடல்பிரியுமென்னாவி—நெல்லு

ஞா: தாயே! இனிமேல் என்னால் ஒன்றுஞ் செய்யமுடியாது. என் கைகள் கொப்பளித்து எரிகின்றன. எனக்கொருவிதமான மயக்கமும் ஆயாச மும் மேலிடுகிறது. தலை சுற்றுகிறது. நெஞ்சு வலிக்கிறது. கணுக்க ளெல்லாம் அயர்ந்து போயின.

லே: ஏண்டி முண்டே! நன்ருய்க் குத்தியிருக்கிருயே. பேஷ்! இந்த அரிசியை நாயாகிலுந் தின்னுமா! பாழும் பிசாசே! நீ எப்பொழுது தொலைவாயோ அப்பொழுதுதான் எனக்கு நல்லகாலம் பிறக்கும். 'செய்வன திருந்தச் செய்' என்பதை மறந்துவிட்டாயோ? நன்ருய்த் தீட்டடி, நாயே!

செந்தின்மா நகர் என்ற மெட்டு.

ஞா:
நீதியோ மங்கை யாரொருவா தியோ
தாதிபோற் கீழ்த்தரச் சாதியோ—இன்றேல்
வீதிபெருக்கும ஞதியோ—எனை
யடிக்கவே மனந் துடிக்குதே ஜலம்
வடியவே உயிர் மடியுதே ஐயோ
நெல்லையே பாவி குத்துதல்தொல் லையே
கல்லுரலைக் கண்ட தில்லையே—உந்தன்
செல்லம் வேலைசெய்த தில்லையே

லே:
கள்ளியே கையால் நெல்லைநீ யள்ளடி
பள்ளங் கண்டதிற் குத்தித் தெள்ளடி—உமி
எள்ளளவுமிலாத் தள்ளடி—எதுங்
கொள்ளை கொண்டுனை யள்ளியேகாதோ
சள்ளையா நீயும் பிள்ளையா—அடி
குத்தடி நன்கு நெல்லுமி நீக்கடி
சுத்தமாய்க் கல் நொய்யைப் போக்கடி—இன்றே
லித்தடியாலடி வாங்கடி

ஞா:
அன்னையே சற்றுப் பார்ப்பீ ரென்னிருகரம்
கன்னிகையா மெந்தன் காலுரம்—வீழ்ந்து
சென்னியுஞ் சுழல்வதோர் பம்பரம்—பாவி
யுழைத்துமே மிகக் களைத்து வாடியே
இளைத்தலா லிப்போ மலைக்க லாயினேன்
அன்னமே யெனக் கின்னுமீகாத தேன்
கன்னம் புடைத்துக்கா தடைத்துப்—போனேன்
அன்னையே ஆதரிப்பா யொத்து

ஞா: அம்மா! அநியாயமாய்ப் பிராணவதை செய்யவேண்டாம். வேலைசெய்தறியாத என்னை இப்பாடுபடுத்தலாமா? இனியாகிலும் இரக்கம்வையுங்களம்மா.

லே. அடி புத்தியில்லாத் தடிமாடே! பாத்திரங்கள் எவ்வளவு சுத்தமாயிருக்கின்றன பார்த்தாயா? குடத்தில் ஒரு சொட்டுத் தண்ணீராவது கிடையாது. குடிக்கவேண்டும். நானுங்குளிக்கவேண்டும். விரைவாய்ப் போய்த் தண்ணீர் கொண்டுவாடி! சீக்கிரம் செய்துமுடி! ஏண்டி! மலை போல நிற்கிறாய்? புறப்படு ஜல்தி.

ஞானம் தரு.

வருத்துவதழகோ மன்னு என்ற மெட்டு.

*தன்யாசி—ஆதி.*

தாதிபோல் நடந்தேன் வீதியைக்கடந்தேன்
பாதிவழி வந்தேன்

கும்பமொன் றெடுத்துக் கூபமே யடுத்து
தும்பைச்செம்பிற் றொடுத்துத் தண்ணீர்மொண்டு முடித்து (தா)
பார்ப்போர் பழிக்க பாதகி குளிக்க
ஊர்ப்புரஞ் சிரிக்க ஊழியனுழைக்க (தா)
அப்பனிங் கிருந்தால் செப்பின னிறந்தாள்
எப்போதுஞ் செய்திருந்தால் இருக்குமோ தொல்லையித்தால் (தா)
இடுப்பு மொடியுதையோ முழங்கால் மடியுதையோ
கடுக்கு தென்செய்வேன் கன்னிகைநொய்வேன் (தா)

ஞா: அம்மா! தண்ணீருமெடுத்து முடித்தாயிற்று. எனக்கு அதிக ஆயாசமும் களைப்புந் தோன்றுகிறது. இனிமேலாவது என்னைச் சும்மா விடக்கூடாதா? பாதியுயிர் போய்விட்டதம்மா!

லே: அடி! உன்னோடு கத்திக் கத்தி எனக்கும் பாதிப்பிராணன் போய்விட்டது. உடம்பும் வலிக்கிறது. நான் சற்று அயர்ந்து நித்திரை செய்யப் போகிறேன். என்னுடம்பு வலியாமல் சற்று பிடித்துக்கொண்டிரு.

(லேனாள் படுத்துக்கொள்ள ஞானம் பிடித்துக்கொண்டிருத்தல்)

ஞானம் தரு.

பாமா தாராு என்ற மெட்டு.

அடைக்கல நாதா ஆறுதல் தாதா
படைத்தனையோ நீதா பாடுபட சதா
அன்னை யிறக்க அகதியா னிரக்க
என்தலை விதியோ எவர்செய்த சதியோ
சிற்றன்னை கோரம் சொல்வதிலென் சாரம்
சற்றிவள் தூங்கக் கால்கரம் பிடித்தேங்க
மேனியுங் கடுக்க மங்கையான் படுக்க
ஏகிறே னம்மை எழுந்தாலடி செம்மை,

ஞா: *ஜெகதீசா! ஏழைமீது கிருபை கூர்ந்து இனிமேலாவது என்னைத் துன் பத்தினின்று காரும். எனக்கும் சற்று நித்திரை வருகிறது. நானும் இப்படி சற்று அயர்ந்து சிற்றன்னை எழுந்திருக்குமுன் விழித்துக் கொள்ளவேண்டும். இன்றேல் கஷ்டந்தான்.*

*(லேனாள் தூங்க ஞானமும் சற்று நித்திரை செய்தல்.)*

## Scene No 4.

*லேனாள் படுக்கையறை.*

### லேனாள் தரு.

மாலையைச் சுழற்றி என்ற வர்ணமெட்டு.

*பார்வி—ஏகம்.*

1. *உத்தம பத்தினி போலெந்தன் மெத்தையி லயர்ந்து நித்திரை செய்கிறாள் புத்தியில்லாத மழுங்கை யென்னையவள் எத்தவே நத்தி யலைகிறாள்.*

2. *ஈனமனைத் தொழிலனைத்துஞ் செய்யென் றென்னுசை தீர வதை செய்ததை கானகஞ் சென்றயென் காவலன் முன்னிலைக் கணக்காயோதுவாள் வைததை.*

லே. *ஆகா! என்ன சொகுசாய் நித்திரை செய்கின்றாள்! அடி நீலி! உனக்குத் தூக்கமொரு கேடா! கானகத்துக்குச் சென்ற என் கணவன் இங்கு வந் தால் இச்சண்டாளி நான் படுத்தியபாடுகளைச் சொல்லுவா ளென்பதில் யாதொரு சந்தேகமுமில்லை. அதற்கு ஏதாவது ஒரு உபாயம் அவசியம் தேடவேண்டும்.*

### லேனாள் தரு.

உன் தேகத்திலே ஒரு என்ற மெட்டு.

*வல்லோர் வெட்டத் தொல்லையில்லைக் கொல்லநல்ல அல்லிருளில்*
*சொல்வேனிப் பேயைக் கொல்வேனே னுயை*
*வேந்தன்வீடு வருமுன்னம் வேலைமுடிப்ப தென்னெண்ணம்*
*வேகமாய்க் கொலை வீரரையழை*

லே: *என் கணவன் திரும்பி வருமுன் இச்சண்டாளி உயிரைப் போக்கிவிட வேண்டும். அடா சேவகா! விரைவாய் நமது கொலையாளரை அழைத்து வா!*

## கோலையாளிகள் வருதல்.

ஞானரஞ்சிதமே யென்ற மெட்டு.

*வராளி—ஏகம்.*

கோலை: இராணி வந்தனமே மகா ராணிவந்தனமே
வரு மானமின்றியே பெருமைகுன்றியே
சிறுவராண்டியே வந்தோ மூன்றியே

லே: வாருமே முனமே நீர் தேறுவீர்மனமே
சிறுகாரியமொன்று செப்புவேனின்று
மனத்திலேவென்று செய்தலே நன்று

கோ: வந்தோமிங்கனமே வினவு மிங்கனமே
வரும்வேலையே தெரி யாத ஏழைகள்
மருகியே யுமை யருகியே-கன

லே: அறிவீர் இரகசியம் அதைச்செய்வீரவசியம்
வெகுவேகமுடனே ஞேதுந்தொழிலை
முடிப்பீரே யதைத் தொடுப்பீரோ-ஜல்தி

## ஓரடித்தர்க்கம்.

யாரம்மா வண்டியிலே என்றமெட்டு.

லே: கட்டாயம் செய்வீரா
கோ: தட்டாமற்செய்வோமே
லே: சிட்டாய்ப்பறப்பீரா
கோ: விட்டாற்பறப்போமே
லே: சந்தடியேன் சும்மா
கோ: தாமதமேனம்மா
லே: அந்தோசொல்லட்டுமோ
கோ: சொல்லக்கொல்லட்டுமோ
லே: ஞானத்தையேகண்டு
கோ. ஈவோமோர்பூச்செண்டு
லே. வாளாலீவீரொன்று
கோ. வந்தனம் நன்றன்று.

சுவாமி விவேகானந்தா என்ற மெட்டு.

லே: சிச்சிச்சிச்சி அவமானம் குலத்துக்ஹீனம்
பேசுவதுந்தடபுடலே பண்ணுவதும் லொடபுடலே
கூசுகிருயேனுடலே வீசு வீசு இவளைவிடலே

கோ: அம்மம்மா அடுக்குமோயிது அறிவுள்ளமாது
தாயிழந்த பெண்ணைக் கண்டால் பேயும்பறந்தழுமே
வாயில்லாப்பிள்ளை பாபம் தட்டுவெட்டுஎன்றுரைப்பது

லே: என்னென்னசொன்னபோதிலும் விடேன்விடேனே
அன்னைபிள்ளைகுணமறிவார் அன்னியரெதையறிவார்
சொன்னமொழிகேட்பீர்ஜல்தி வாங்கும்வாங்கும் உயிரைவாங்கும்

கோ: நடுநடுங்கிப் பயந்து சாகிறோம் வீடுபோகிறோம்
புத்திரியின் இரத்தப்பழி நத்திடுமென்றதோர்மொழி
சத்தியமேவேண்டாமம்மா பாவம் பாவம் விடுவீர்சும்மா.

கோ: அம்மணி! இப்பாவமற்ற சிசுவைக்கொல்ல எங்களால்முடியாது. அரசன் கேள்விப்படும் பட்சத்தில் எங்களுயிருக்கே மோசம்வரும்.

லே: அப்படியா! எனக்குக் கீழ்ப்படியமாட்டீர்களா? அரசனில்லாதபொழுது அரசி அதிகாரமென்பதைமுற்றிலும் மறந்துவிட்டீர்களா?

## லேனள் தரு.

சாரங்கந்தன்னிலோர்சர்ப்பக்கணைதனைப்பூட்டி என்றமெட்டு.

ஆக்கினைசெய்வேனயோக்கியரேவுமைநானே—ஜீவன்
போக்கிடவே வதைசெய்துதலை வாங்குவேனே
சீக்கிரமாகநீர் செப்பிடுவீ ரின்றேல்
சட்டப்படி யிட்டப்படி கட்டிவெட்டிப் போட்டும்—ஆக்கினை

கோ: அம்மணி! தங்களுடைய மனஸ்தாபம் எங்களுக்கு வேண்டாம். தாங்கள் காலாவிடும் வேலையைத் தலையால் செய்யத் தயார்.

லே; சரி! சந்தோஷம்! இதோ பாருங்கள் மஞ்சணையில் நித்திரைசெய்கிருள். சந்தடியின்றி நள்ளிரவில் ஒருவருக்குந் தெரியாமற் காட்டுக்குக்கொண்டு போய் இவளை வெட்டிக்கொன்றுவிடவேண்டும். அதற்கு அத்தாட்சியாக இருகரங்களையும் வெட்டி எனக்குக் காண்பிக்கவேண்டும். உங்களுக்கு ஏராளமான திரவியம் தருகிறேன். ஜல்தி! ஜாக்கிரதை!

[ஞானத்தைத்தூக்கிப்போதல்]

## Scene No. 5.

### ஆரணியம்.

[ஞானத்தைக் கீழே இறக்கிவைத்தல்]

அந்: அடே இராயப்பா! செத்த சருகுகுடுரா சொல்றே. போயிலேக்காம்பு இருந்தாலும் பாரு. ஒரு ஓசனே வருதுரு?

இரா: எலே அந்தோணி! வருசமெல்லாம் ஓசிதானடா ஒம்புழப்பு. இந்தா உன் இழவுக்கு. என்னடாப்பா புச்சா ஓசனே உதிச்சிருச்சு. நம்பகாரியத்தை விரசிண்டு முடிச்சுறணுண்டா.

அந்: எண்டா இராயப்பா! எனக்குஞ்சுமாறு—இரு வர்றேன்—ஒண்ணு, ரெண்டு, மூணு, நாலு, அஞ்சு—அஞ்சுபுள்ளே இருக்குது. நாஞே புள்ள கூட்டிக்காரன். நீயோ மலட்டுப்பய. எம்மனசு ராசா வூட்டுப்புள்ளே யைப்பார்த்ததும் இளகிரிச்சுரு. எப்பிடிரு கொல்றது. விட்டேட்டு ஓடீருவமா? வேணுமுடா பாவம். கொண்ணுக்க நம்மைச்சாமி தண்டி யாமே விடாது.

இரா: போடாபோ! சாமியைக்கண்டதாரு பூமியைக்கண்டதாரு? முதல்லே வயித்துச்சாமியைப்பாத்துட்டுல்ல வேறே சாமியெப் பாக்கணும். பாவ ம்மா? பெரிய பாவத்தைக் கண்டவுண்டா. நீ மொத்தம் கொண்ண உசு ரெல்லாம் ஒரு சுமாறு ஒண்ணறை டசன் இருக்கும். இப்பத்தே பாவத்தைக்கண்டுட்டான். நீ யிப்பவர்றியா வல்லேயாடா? நான் போயி இப்ப நம்ப ராசாத்தி கிட்டச் சொல்றேன்.

அந்: அடேடேடே! பொர்ரு! பொர்ரு! செத்த பொர்ரு! மனசைத்தேத்திக் கிறேன். நம்ப ராசாத்தி காசு குடுப்பாங்கள்ள.

இரா: ஆமா! சொல்லலே அவுக! நல்லா மெத்தை ஊடா ஒரு காரக்கட்டு வூடு கட்டறல்லாண்டா?

அந்: சரி அப்பக்கழுதை சிடக்கு. பின்னத்திட்ரு கத்தியே பாவங்கிவமெல் லாம் பறந்துருச்சுடா. புடிரு! அடே வெட்டுரு.

[ஞானம் விழித்தல்]

ஞா: ஆ! இதென்ன இருளடைந்த காடாயிருக்கின்றதே! ஐயோ! நான் அரண்மனையிலல்லவோ படுத்து நித்திரை செய்தேன். ஜெகதீசா! இதென்னமோசம்! ஆ! இங்கெப்படி நான் வந்தேன். ஐயோ ஒரு கார ணமுந்தெரியவில்லையே. அதிக பயமாயிருக்கின்றதே! ஆ! இவர்கள்

கள்வரோ அண்ணன்மாரே! நீங்கள் யார்? எங்கு வந்தீர்கள்? நானெப்படியிங்கு வந்தேன்?

அந்: நாங்க! கொலே செய்ரவுங்கோ! நாங்கதே ஒன்னேக்கொண்டாந்தம்.

ஞா: எதற்காகக் கொண்டுவந்தீர்கள்? என்ன காரணம்?

இரா: ஒன்னேக் கொ.........கொ.........கொல்றதுக்கு.

ஞா: என்னேக்கொல்லவா! ஐயோ! ஜெகதீசா! (கீழேவிழல்) என்னேக் கொல்ல நானென்ன குற்றஞ்செய்தேன். ஐயோ நான் பெண்ணாய்ப் பிறந்தது இவ்விதப் பாடுகளேயும் கஷ்டங்களேயும் அடையத்தானே? மூதேவி! சிற்றன்னே செய்த சதியோ!

## ஞானம் புலம்பல்.

### பத்தினிகண்ணகியே என்ற மெட்டு.

அண்ணாவேண்டாந் தெண்டமே பெண்ணேயிரு துண்டமே
பண்ணிடப்பாவம்போமோ வென்றெண்ணுமே னிப் பாவிது டிக்கலாமோ
பிள்ளேயுமக்கில்லேயோ பீடையிதுந் தொல்லேயோ
நள்ளிரவிலிப்பழிசெய்யநாடி வந்தீரே லதனேயொழி
சிற்றன்னே யோசனேயோ பெற்றவன் வாசனேயோ
முற்றுமுகராவண்ணம் மூளிசெய் மார்க்கமிதுதானெனத்திண்ணம்
தஞ்சமென்முகம் பாரும் கெஞ்சுமுயிரைக்காரும்
சஞ்சலமானயிப்போரும் வந்தசெய்தி சற்றடியாட்குக் கூறும்

ஞா: அண்ணமாரே! என்னேக்கொல்லாது விட்டுவிடுங்கள். நான் எங்கேயாகிலும் சென்று பிழைத்துக்கொள்ளுவேன். வைத்தாற்குடுமி சிரைத்தால் மொட்டையென்றபடி நீங்கள் தயவு வைத்தால் எல்லாம் ஆகும். நீங்களே எனக்குத் தஞ்சம்.

### மார்க்கத்தில்கண்டகனிதனக்துள்ள என்ற மெட்டு.

கானடா—ஆதிதாளம்.

கோ: வெட்டிவாருமென்றுன் னன்னேயிட்ட சட்ட திட்டமிதேயறிவாய்-உனே
வெட்டமனமில்லே விட்டிடிலுந்தொல்லே யேற்றுக்கொள்ளோம் உன்
சொல்லே

ஞா. சிற்றன்னேயார்க்குநான்செய்தகுற்றமென்ன சாற்றுவீரெந்தன்முன்னே
—யானும்
கொற்றவன்குழந்தைக் கொல்லாதீரெந்தந்தைக் கொடியவளகந்தை

கோ: மன்னித்தல் மாற்றான்தாய் தவிரமழுவரெம்மால்முடியாதம்மா—பாவி
கன்னிகை சுந்தரி காக்குந் தாயைத்துதி கானகமே யுன்கதி

ஞா: பெண்ணுணுடன்நீர்பிறந்தும் பரிதாபம்பார்த்துப்பேசுகின்றீரோ-உமின்
தண்டனைக்கஞ்சியேதங்கையான் கெஞ்சவே தயவுவைகொஞ்சமே

கோ: கொலைசெய்துகரங் கொண்டேகாமற்போனால் கோபிதலைகேட்பாளே—நீயும்
உலையிலே பட்டு உதவியைவிட்டு உழன்றாயையோகெட்டு

ஞா: ஐயோ யானென்செய்வேன் ஆவிதுடிக்குதே அண்ணாவேண்டாந்தெண்டமே—நீர்
நீடூழி வாழ்வீரே நீதிபுகல்வீரே நேர்மையதைச் செய்வீரே.

கோ. அம்மா! எங்களுக்கும் பரிதாபமாய்த்தானிருக்கிறது. என்ன செய்கிறது. அரசியின் கட்டளையோ அப்படியிருக்கிறது. ஆனால் ஒரு யோசனை. உன் உயிரைக்கொல்லாமல் உன் இருகரங்களை மாத்திரம் வெட்டிக்கொண்டுபோய்க் காண்பித்து விடுகிறோம். அப்படிச்செய்யாவிடில் எங்களுயிருக்கே மோசம் வரும்.

ஞா: அண்ணமாரே! என் இருகரங்களையும் வெட்டிவிட்டால் என்னுயிர் இருந்தென்ன பிரயோஜனம். என்ன வேலைசெய்யமுடியும். ஒரு பெண்ணுக்கு அங்கத்திலேதேனுங் குறைவேற்படில் யார்தான் அப்பெண்ணை மதிப்பர். தயவுசெய்து மன்னியுங்கள் அண்ணமாரே!

கோ: அது முடியாது! அடே பிடிடா! எடு கத்தியை!

[கரங்களை வெட்டிப் போதல்.]

## ஞானம் புலம்பல்.

மதிப்பெல்லாம் போச்சுது என்ற மெட்டு.

முகாரி—ரூபகம்.

ஐயோ கரமிழந்தேன் ஆராத் துயரங்கொண்டேன்
பாவி மனமுடைந்தேன்—ஈசா
சண்டாளக் கொலைஞரே பெண்பாவ மறிவீரே
தண்டனைக் காளாவீரே—ஐயோ
இரத்தமாறாய்ப் பெருகி சத்தமெல்லாஞ் சுருங்கி
சத்துங் குறைந்ததுருகி—தேவா
ஒண்டியாளொரு நொண்டி எண்டிசையேவேனண்டி
பெண்ணினியாவேன் சண்டி—ஐயோ

ஞா: ஈசா! இனி யென்ன செய்வேன். பாவிக்குக் கைகளில்லையே. வலியோ சகிக்கக் கூடுதில்லை. ஐயோ! என் பிராணன் போய் விட்டாலும் நலமா யிருக்குமே. என்னை இப்படி உயிரோடு வதைத்தனளே அச்சண்டாளி! ஜெகரட்சகா! ஆ!

## ஞானம் தரு.

### உடுமலையின் முத்து என்ற மெட்டு.

காவடிச் சிந்து—ஆதி.

எட்டுவயதாகுமுனென் னன்னை—எங்க
விட்டிறந்தா ளையோபாவி யென்னைப்—பின்பு
திட்டஞ்செய்தோர் கெட்டிக்காரக் குட்டிதனைக்
கிட்டிப்பிதா தாலிகட்டிவந்த தாலிவ்வட்டி
எந்தையிருந்தாற்றொல்லை யில்லை—அவள்
தந்திரமொழிகட்கள வில்லை—என்னை
மயிலேகுயிலே ஒயிலேதாயே தேனேமானே கிளியேயெனத்
தொழுதேனப்போநினைந் தழுதேனிப்போ
பெற்றபிதா பிரிந்தபின்பே—எந்தன்
சிற்றன்னை யிழந்தாளென்மீ தன்பே—என்னைப்
போடிவாடி நாயேபேயே பக்கிரிச்சிரிக்கியே யென்
றேசினளே நீலி லேனளே.

ஞா: ஐயோ! ஜெகதீசா! என் கஷ்ட மிப்படியாயிற்றே! என் செய்வேன்? யாரை நொந்து கொள்வேன்? நான் இது வரை சிந்திய கண்ணீரால் ஒரு சமுத்திரத்தையும் நிரப்பலாமே. இப்பொழுது நான் எதை நினைத்தழுவேன்? என் இளம் பிராயத்தில் என்னை விட்டுப் பிரிந்த என் அருமைத் தாயை நினைந் தழுவேனோ? அல்லது என் தகப்பனார் என்னை விட்டுக் கானகஞ் சென்றபின் என் சிற்றன்னை படுத்திய துன்பங்களை நினைத்தழுவேனோ? ஒருவருமில்லாத இப் பயங்கரமான காட்டில் உதவியற்று இரு கரங்களு மிழந்த பரிதாப கோலத்தை நினைத்தழுவேனோ? ஈசா! என் விதி யிப்படியாயிற்றே? பாவிக்கேன் இக்கோலம்.

## ஞானம் புலம்பல்.

### கோவைப்பழம் தின்றதாலே என்ற மெட்டு.

1. பாவிக்கேனோ யிந்தக்கோலம் ஐயோ
ஆவிபறக்குதே அங்கந்துடிக்குதே
சாவித்தாளாக்கிடச் சண்டாளிசதியிதோ ஐயோ

2. தந்தைவனஞ்சென்றதாலே என்னப்பா
தந்திரமாயன்னை நொந்திடநிந்தனை
தந்திடவந்ததென் னுயிர்க்கிதேயந்தம் அப்பா

3. காதையும டைக்குதையோ என்னம்மா
வாதைசகித்திடேன் பாதையறிந்திடேன்
போதையானேனெந்தன் புத்திமிரண்டிட அம்மா

4. பெற்றதாய்தந் தையிழந்து ஐயோ
பற்றுங்கையிழந்து சுற்றுரைமறந்து
பற்றில்லானைப்பலவாய் நினைந்தழுதேன் ஐயோ

ஞா: ஆ! பரமாநந்தா! சிற்றன்னை யென்னை யிப்படி அலங்கோலப் படுத்தி விட்டாளே! என் தகப்பனுர் வனம் போயிராவிடில் இதெல்லாம் சம்ப விக்குமோ. என்செய்வேன் இக்கானகத்தில் பாவி எப்படி என் காலத் தைக்கழிப்பேன். அர்ச்சியஷ்ட சேசுமரிமாதாவே! வழியொன்றுந் தோன்றுத யெனக்கு ஒருவழி திறந்து வைக்கலாகாதா?

## Scene No. 6.

### வனம்.

[பிலவேந்திரன் வேட்டையாட வருதல்.]

### பிலவேந்திரன் தரு.

யாரடி உன் ஊர் பேர் சொல்லடி என்ற மெட்டு.

வேட்டை யாட நாம் செல்லு வோம்—வன
விலங்கைப் பிடித்தடித்து வதைத்துயிர் மடித்திட—வேட்டை

1. வீராதிவீரமுடன் சூராச்சிரமத்துடன்
சீராய்க்குகைபுதரைப் பூராய்க்கலைத்திடவே
நேராய்விலங்கினங்கள் நெருங்கிநமையருக
கூரான அம்பு ஈட்டி தாராளமாக நீட்டி—வேட்டை

2. குள்ள நரிகளெங்கே கள்ளவோ நாய்களெங்கே
முன்னம் பன்றி யொருங்கே மூர்க்கப் புலிக ளங்கே
துள்ளித் திரியு முயல் துரிதமுள கலை மான்
புள்ளி மரை யொதுங்கும் பள்ளம் புதரிற் சிங்க—வேட்டை

பில: வேடரே! காட்டுமிருகங்களை யெல்லாம் கொன்றுவிட்டோம். இனி நமது குடிகளுக்குக் கஷ்டமிராதல்லவா? சரி வாருங்கள். நேரமாகிறது.

நம்முடைய நாட்டுக்குச்செல்வோம். (சுந்தரி அழுகைக்குரல் கேட்கிறது) ஆ! வேடரே! கேட்டீர்களா ஒரு இனிமையானகுரல்? பெண் குரல்போ லிருக்கிறது. ஐயோ! அதுவும் அழுகுரலாகக் கேட்கின்றது. சரி வாருங்கள். அச் சத்தம்வரும் திசையை நோக்கிச்சென்று பார்ப்போம்.

(கொஞ்சதூரத்தில் ஞானத்தைக் காண்கிறான்.)

பில: ஆ! பார்த்தீர்களா! வேடரே! இப் பெண்ணின் ரூபலாவண்யமென்ன! என்ன அழகு! என்ன நிறம்! ஆ! ஆ! இப்படிப்பட்ட பெண் உலகத்தில் காண்பதரிது. கடுக்கன் ஜோடியும், காளைமாட்டு ஜோடியும், கணவன் மனைவி ஜோடியும் காண்பதரிதென்பார்கள். வாஸ்தவந்தான். இப் பெண்ணொருத்தியே நமக்குத்தகுந்த ஜோடி! எப்படியாவது இவளையே மணமுடிக்கவேண்டும். ஆகா! இவள் உருவம் தேவ கன்னிகையின் உருவம்போ லிருக்கின்றதே.

## பிலவேந்திரன் தரு.

### பலே தமாஷ் பருவமீது என்ற மெட்டு.

ஆகா மங்கை யுருவங்காணவே திருத்
தேவ கன்னிகைபோ லெனக்குத் தோணவே
இவள் நடையும் நவரத்தின வுடையும் பரிமளித்த
ஜடையும் பார்த்திடலென்ன ஜோர்—ஆகா
விலங்குவள சாடமிந்த வனந்தனி லிப்பதுமை
கலங்கிடக் காரணமென் கருத்தடங்காப் புதுமை
புலம்பி யழுமிப் பெண்ணைக் கவர்ந்திடலே மகிமை
நலவலதாக மோகமாக யிருந்தென் பெருமை
திலகம் போன்ற யிவளைத் தெரிந்தெடுத்த லருமை—ஆகா

பில: சரி! இவள் அருகிற்சென்று அழுகையின் காரண மென்னவென்று விசாரிப்போம்.

### ஆறுமுக வடிவேல் என்றமெட்டு.

காவடிச்சிந்து—சாப்பு.

பில: தனிமையாயே யிவ் வனந்தனில்—வனிதையே!
தாரையாய்க் கண்ணீ ருகுப்பதேன்—இங்கு
சார்ந்த வரலாறு நேர்ந்த விதமென்ன
போர்ந்தளவு நன்கா ராய்ந்து ரைப்பாயே
சத்தியற்றுக் கத்தியழும் பெண்ணே—உன் தந்தைதாய் பேர் உன்சொந்த
இக்கண மியம்புவாய் கண்ணே [ஊர் பேர்

ஞான: ஐயரே யானெவ்விதங் கூர்வேன்—நானே வனுதி
தைய லெனக் குற்ற துன்பமே—பெயர்
சுந்தரி ஞான சவுந்தரி யானு
மிந்த மாதிரி நொந்து புலம்பிட
வந்த தேனே கால வினையோ—யார்தீவினையோ
சிந்தை நொந்து மெலிந்தே னையையோ

பில: கொடு விலங்கு சூழ் வனந்தனில்—பயங்கரமே—உந்தன்கரமே
கவர்ந்து சென்ற கள்வன் யாரோ சொல்—படு
வஞ்ச நெஞ்சரும் கொஞ்சமேனுமே
தஞ்சி டாதுன் கஞ்ச கரமதை
வாங்கிடவே காரணம் யாது—விளம்புவாய்நீ
பாங்கியே மனங் கலங்காது.

ஞா: தர்மதுரை யேதயை கூரும்—எனைக்கண் பாரும்
கர்மவினை வந்த பின் தீரும்—இக்
காரிருள் நிறை பாரிலேயொரு
காரிகை யெனக் காருந்துணையில்லை
பாத்திரமில்லாத பெண் பாவி—ஏழைநான்கூவி
காத்திருக்கக் கருணைசெய் தேவி.

ஞா: ஐயரே! இனி என்னால் ஒன்றும் செய்யமுடியுதில்லை. நா வறண்டு போனது. தயவுசெய்து எனக்குக் கொஞ்சம் ஜலம் கொண்டுவந்து கொடுத்து என் தாகத்தைத் தீருங்கள். தாகம் அதிகமா யிருக்கிறது.

## ஞானம் தரு.

### காந்திமகான் போலிவன் என்ற மெட்டு.

மார்க்கிகரே காரிகை யெனைத்தற காருமே—கவலை தீருமே
தாரகை சோகம் தீர்த்திடென் தாகம்
தருணமிதனில் வாரும் எனைப் பாரும்
தயை கூரும் தண்ணீர் தாரும்—மார்

பில: அம்மணி! உன் பரிதாப கோலத்தைப் பார்க்க என் மனம் அதிக நோவுண்டாகிறது. உன் வரலாற்றை சற்று எனக்கு விபரமாகக் கூறு.

## பிலவேந்திரன் தரு.

### தங்கை பெற்ற தங்க மக்களா என்ற மெட்டு.

நொண்டிச்சிந்து.

தாயேநீ யெந்த நகரம்—என்னம் மம்மா—நீ
தியங்கி மனந் தளர்ந்த தென்ன விபரம்

உற்ஞர் உறவின ருண்டோ—என்னம் மம்மா—உந்தன்
பேற்ரு ரேனைப் பிரியக் காரண முண்டோ
உன்னைப்பெற்ற தாய்தந்தைபேரும்—சொல்லம்மா—நீ
உள்ளதை யுரைத்திடிலென் னுள்ளமுந் தேறும்
கரங்களிழந்த காரணம்—கூரம்மா—நீ
கலங்கித் தவித்திடலு மென்ன தோரணம்.

## ஞானம் தரு.

பத்தோன்பதாம் நூற்றுக்குமேல் என்ற மெட்டு.

1. ஐயனே யிங்கெடுத்துரைப்பேன் ஆபத்திலென் வரலாற்றை
அடியா ளிளமையி லென் னன்னையுயிர் துறக்க
ஆதரித்தா ரன்புட னெந்தன்பிதா —பின்பு
வேதனை யீந்தனள் சிற் றன்னைசதா

2. தையலெனை யீன்றபிதா தார வனவேட்டைக் கேக
தருணமது வேளையென்று சண்டாளி சிற்றன்னையும்
சங்கடம் புரிந்தெனையே வைதனளே—மற்று
மிங்கன மழுவராலே செய்தனளே.

லை: சரி! சுந்தரி! என்னோடு என் அரண்மனைக்குவா! நான் உன்னைக் கூட்டிப் போய் உன் ஜீவியகாலபரியந்தம் உன்னைச் சந்தோஷத்தோடு பாதுகாப்பேன். யாதும் சந்தேகப்படவேண்டாம் என்னோடு வா!

[இருவரும் அரண்மனை செல்லல்.]

## Scene No: 7.

(தருமர் வேட்டைமார்க்கஞ்சென்று திரும்புதல்)

(உ ரோ மா பு ரி அ ர ண் ம னை)

## தருமர் தரு.

கழத்தில் விழுந்தமாலை கழற்ற என்ற மெட்டு

1. கேடுவரும்பின்மதி கெட்டுவருமுன்னென்று
கற்றகவிஞர் சொன்ன சாதனமே
வீட்டை நாடியேதேடிக் காட்டைவிட் டேகும்போ
வாட்டுதையோ யிதுநூதனமே
கூட்டைவிட்டெனதுயிர் பிரியக்காலமோ
காட்டுதோமுன்வீட்டி லேதுமலங்கோலமோ

2. யானைகாணுமுன்மணி யோசைகேட்குமென்பது
யாருமறியாதவோர் இரகசியமோ
ஞானைவிடஞாபகந்தானு முண்டோயேனென்னை
வாதிக்குதேதோவோ ரபாயமே
கல்லிடற கால்தளர நாவுமுலர
எல்லைதேடி யில்லஞ்சேரத் தொல்லையேயிது

தரு: ஜெகதீசா ! இதென்ன ! போகும் வழியெல்லாம் சகுனத்தடையாகவே யிருக்கிறது. ஏதாவது எனக்குத் தீங்கு நேரிடக்கூடுமோ ! அல்லது என் கண்மணி ஞானுக்குத்தான் ஏதாவது துன்பம் நேர்ந்ததோ ! யாது சம்பவிக்குமோ தெரியவில்லையே !

(வீட்டில் ஞானத்தைக்காணது தவிக்கின்றார்)

(லேஞள் அவர்முன் வருதல்)

பார்சி—ஆதி.

தரு: காட்டிலிருந்திப்போ வந்தேனிங்கே வீட்டிலிருந்தயென்ஞானமெங்கே
கூட்டியெனைநினைப்பூட்டியின்பங்காட்டி ஓட்டிக்கொண்டென்னிடம்வா

லே: கணவனேகளைப்பாறுவீர் கணமேனுமிளைப்பாறுவீர்
உணவையுண்டபின்னுறக்கங்கண்டபின் உன்ஞானத்தைப்பெறுவீர்

தரு: அன்னமருந்திடல்முக்கியமோஎன்அன்னத்தைக்காண்பதாரோக்கியமோ
என்னசொன்னலுமென்நன்றியறியாத பன்றியேயிதுவுன்யோக்கியமோ

லே. சொல்லக்கூடமனமில்லையே இல்லகத்திலவளில்லையே [யே
செல்லக்குழந்தைபோல் சீராட்டிப்பாராட்டிவந்ததாலிப்பெருந்தொல்லை

தரு: அடி நீலி ! சண்டாளி ! எங்கேயென்கண்மணியை ! உண்மைபேசு. என்ன செய்தனையோ அடி பாதகி !

லே: நாதா! சங்கதியைச் சரியாய் அறியாது கண்டபடி உளரவேண்டாம். உண்மையை அறியுமுன் என் வீணுய்த் தவிக்கிறீர்கள். எரிகிற தீயில் எண்ணெய்விட் டவிப்பதுபோலிருக்கிறது தங்களுடைய வார்த்தை. நான் என் அருமை ஞானத்தைக்காணமல் ஐந்தாறுநாளாயன்னம் புசிக்காது அதே கவலையுற்றிருக்கின்றேன். அப்படியிருக்க, அவ்வருத்தம் போதாதென்றே தாங்களும் எனக்கு மனச்சஞ்சலத்தையுண்டுபண்ணுகிறீர்கள்.

தரு: அடி பாதகி! ஐயோ! ஞானம் காணுமற்போய்விட்டாளா ! ஆ ! அடி சண்டாளி ! ஏன் என்னேடு வாது செய்கின்றாய்? மகளை எங்கே என்று கேட்டால் உளரித் தவிக்கின்றாய் ?

தக்கபாரக்கல்லைத்தூக்கி என்ற மெட்டு

தரு: ஒகோகோ யேண்டி யிவ்வாது—வெகு
ஊக்கமுடனெனக்கோது—அடி
போக்கிரியேயேதோர்சூது—செய்த
தால் விளைந்ததித் தீது

லே: நாதா நவிலுவேன் கேளும்—எனைத்
தீதா யுரைக் காதீர் மீளும்—தங்க
ஞானத்துக்கே யானெந்நாளும்—என்ன
லானமட்டுஞ் செய்தாளும்

தரு: சீச்சீயென் கண்முன் நில்லாதே—அடி
பேச்சி லேமாற்றல் செல்லாதே—உந்தன்
மூச்சுப்போமிது பொல்லாதே—வெளிப்
பூச்சிலெந்தனை வெல்லாதே

லே: சொந்தக்குழந்தைபோல் ஞானம்—இங்கு
சந்தோஷமாயவள் ஸ்தானம்—தூங்க
வந்தவிதியவ மானம்—யான்
எந்தவிதஞ்சொல்வேன் ஈனம்.

லே: பிராணநாதா ! ஏன் உங்களுக்கு இவ்வளவு கோபம்? உள்ள சங்கதியை உரைக்கு முன்னே ஏன் பறக்கிறீர்கள்? சொல்லுகிறேன். சற்றுக் கேளுங்கள்.

## லேனாள் தரு.

எனதம்பாள் மதுரை மீனாட்சி என்றமெட்டு

சுந்தரி சரிதையைப்புகல—உந்தன்
சந்தேகந் தவிர்த்தகலச்—செய்வீரே
நிந்தனை யேசகல
சிந்தனை வேரோடகல

தாயா ரிழந்தவ ளென் றிருந்தேன்—அவள்
வாயால் வைததை மறந்தேன்—தொண்டூழி
ஆயாள் போற் புரிந்தேன்
அணி துணியு மணிந்தேன்

வீடு விட்டயல் மனை சென்று—பசி
யோடு பகலிற் றுயின்று—எப்போதுமென்
னோடு போர்க்கு நின்று
பிரிந்த னளே நன்று

நித்திரை நின்றெழுந்த காலே—உந்தன்
புத்திரி மறைந் தாளே—பதறியான்
எத்திக்கும் பல ஆளே
அனுப்பியதும் பாழே

லே. பிராணநாதா! நான் அவளை எவ்வளவோ பட்சமாய் வைத்திருந்தும் ஒரு நாள் நள்ளிரவில் யாரோ தூக்கிக்கொண்டு போய்விட்டார்கள். என் செய்வேன்?

தரு: அடி பழிகாரி! என்ன வார்த்தை யுரைக்கின்றாய்? ஞானம் நல்லவளாச் சுதே. ஏன் அநியாயமாய்ப் பொய் புகலுகிறாய்? அடி மோசக்காரி!

லே: ஐயோ! சேசுமரிமாதாவே! என்னை மோசக்காரி பழிகாரியென்று அவதூறாய்ப் பேசுகிறீர்களே! நாதா! உள்ளதைச்சொன்னாலேன் உடம்பெரிச்சல். என் பேச்சை நம்பலாகாதா?

ஐயாயிது ஞாயமோ என்ற மெட்டு.

தரு: தங்கஞான சுந்தரி எங்குசென்றளோவிரி
மங்கையே தயைபுரி தங்குமிடம் விபரி

லே: சுந்தரி சென்றயிடம் சுற்றிலுங்காணேன் தடம்
முந்தமுறை யென்னிடம் மொழிந்திடிற் சொல்வேன்திடம்

தரு: அன்னையென் றிருந்தனை என்னதுன்பஞ் செய்தனை
கன்னியுன் பொருந்தனை யுன்னிய கன்றோரமனை

லே: ஆறிவரும் புண்ணிலே ஆணியாழ்ந்திடும் போலே
தேறிவரு மென்மேலே சீறிச்சினப்பது மல்லே

தரு: மாயமோசக் காரியே மூளியலங் காரியே
ஞாயமாய்த் தூத்தேரியே ஞாலமினியுன் தூரியே

லே: நன்குபசரித்துமே நாயகியுரித்துமே
அன்பனே வெறுத்துமே அகன்றலே யபத்தமே

தரு: அடி பாதகி! என் முகத்தில் விழிக்காதப்புறஞ்செல். நீ செய்த சதியே! போ! ஆ! என் கண்மணி ஞானம்! உன் முகத்தைச் சற்று எனக்குக் காட்ட மாட்டாயோ! ஐயோ என் னருமைச்செல்வமே! உனையானெப் பொழுது பார்த்து ஆனந்திக்கப்போகிறேன். புலிக்குட்டி கேட்ட என் பெண்புலியே! ஐயோ! எங்கிருக்கின்றாய்?

## தருமர் தரு.

### ராஜராஜேஸ்வரி என்ற மெட்டு.

பார்சி—சாப்பு.

மா னே மரகதமே தேனே திரவியமே
நா னே னிக்கதி யானேன்

கானகஞ்சென்றதாலென் கண்ணிழந்தவனுனேன்
ஆனகுழந்தையொன்றைத் தானதருமம்செய்தாள்—மானே
ஞானசவுந்தரியே ஞாலமினித்தரியேன்
வானபரனறிய வேகாதுவெந்துநொந்தேன்—மானே
எங்குசென்றனைகண்ணே இயம்பிடுவாய்பெண்ணே
பொங்குதையோஎன்அகம் மங்குதையோநின்முகம்—மானே

தரு: ஆ! இச் சண்டாளி எவ்வளவுபெரிய துக்கத்தை மூட்டிவிட்டாள். சிறு நெருப்பு பெரிய காட்டையும் கொளுத்திவிடுமன்றோ? பாம்புக்குப் பாலூற்றி வளர்த்துவிட்டுத் தீங்கியற்றிவிட்டதென்று நொந்துகொள்வதிலென்ன லாபம். என் அருமை மகளே! என் உயிரைப்போல் பாதுகாத்து வந்தேனே. கண்மணி! உன்னை நான் எப்பொழுதுகண்டு களிகூறுவேன்.

## தருமர் அகவல்.

அவனியேயமைத்த ஆனந்தமறைமூலா
புவரையேதவிர்த்த புவனசெங்கோலா
பவயிருளகற்றும் பரமகாருண்யன்
குவலயக்குரு கிருபையாலொரு
மங்கையையடுத்து மங்களமுடித்து
சுந்தரியுன்னையே சுகிர்தமாய்ப்பெற்று
முலைப்பால்மறவாமுன் மோட்சகதியடைந்தாள்
தலைவிதியைநொந்து தவித்துநின்றழுது
எள்ளுக்குளெண்ணைபோல் என்கண்ணுக்குள்ளிருந்த
பிள்ளையேயெனைவிட்டுப் பிரிந்தனையந்தோ
கேட்டபொருளெலாம் கணக்கிலாதளித்தேன்
போட்டதுணிமணிகள் புதுப்புதுவிதமே
குறைவேதுமின்றி குணமுடனிருக்க
மறைந்தனையேனே மயங்கவிட்டகன்றாய்
சிற்றன்னையுனக்குச் சதிவிளைத்தனளோ

மற்றவரெவரும் மானக்குறைவாக்கியரோ
பெற்றவளின்றியென் பாக்யமென் றுயிர்விட்டையோ
பற்றற்றெவரேனும் பலவிதமேசியரோ
அனல்மெழுகாயென்மனம் அலைசடிப்பட்டதே
புனல்காணுப்பயிர்போல் பாவியுயிர்பட்டதே
கனிபோலிருந்தவுன்னைக் கவர்ந்தெவன்சென்றானோ
தனியாயிருக்கையில் திருடனபகரித்தானோ
தரணிவாழ்வென்னென்று தற்கொலைபுரிந்தையோ
மரகதமுன்னையே மறைத்தவனெவனோ
கன்னிமரிபாலா கருணைபொழிசீலா
பொன்னையனேசதா போற்றுமனுகூலா
துன்புற்றயெந்தன் இன்பஞானபுதல்வியைக்
கண்டகமகிழவே கருணைசெய்தேவா

[தருமர் புதல்வியைத்தேடும்படி ஆட்களையனுப்புதல்.]

## Scene No. 8.

### சி மி யோ ன் த ர் பா ர் .

சிமியோன் தரு.

மணிப்புரம்விட்டோம் என்ற மெட்டு

மறைமுதல் மூவா மதர்வொளிதேவா
மடமைந்த னென்னிடம் வா

தீனர்தயாளா திவ்யகுணகரா திருக்கரத்தாலணை வா
கொடுமெய்வரம் கூப்பினேன்கரம்

குருசினி லுதிரம் கசிந்ததே மதுரம்
கிடைத்ததோ ராதாரம்

மன்னுயிரைமீட்க வுன்ஜீவனைவிட்டாய் மிகுந்த நமஸ்காரம்
விசுவாசி சேசை நேசி

ஐயா மெய்யாய்ப் பையன்பண்ணும் பணிவிடையேனும்
பெருங் கொடையோ

சதாவென்நாவால் சாற்றிப்போற்ற சற்றேதுந்தடையோ
போற்றிப்புகழ் அகமகிழ்

[பிலவேந்திரன் வேட்டையாடித் திரும்பிவருதல்]

மநுவேசேரித்த என்றமெட்டு

திருப்புகழ்—ஆதி.

சிமி: வணமே சென்றித் தினமே விலங் கினமே
யேதுங் கொணர்ந்தாயோ
கணமே யெந்தன் மனமே காணத் தனமே
மகிழ மனமாமே

பில: சென்று விலங்கைக் கொன்று உயிரோ டொன்று
கொணர்ந்தே னதைவென்று
நன்று மகிழ்வீ ரென்று நினைத்தே யின்று
பிடித்தே னொரு கன்று

சிமி: மிருக மதனினுருவ மதைநீ யொருவித
மிங்குரைப் பாயே
அருமை யுளதோ பெருமைக் குளதோ
பருத்த விலங்கோ பகர்வாயே

பில: இருகா லுளது இருகை யிலது உருவோ
மதிப்புக் கடங்காது
அருமை யுளநற் கருணை வாய்ந்த மிருக
மதனைப்பெறு வீரே

பில: பிதாவே! இரு காலுள்ளதும் இரு கைகளுமில்லாத ஒரு பெண்மான் கொண்டுவந்திருக்கின்றேன்.

சிமி: ஆ! என்ன புதுமை! இருகாலுள்ள மிருகமாம். இருகைகளில்லாததாம். மிருகத்துக்குக் கைகளுண்டோ! இரு கால்கள்தானே! என்ன ஆச்சரியம்! மகனே! எங்கே அம் மானைக் கொண்டுவா பார்ப்போம்.

[ஞானசுந்தரியை அழைத்துவருதல்]

ஆகா! ஏதோ ஓர் அழகான பெண்மணியைக் கொண்டுவந்திருக்கிறாயே! பாவம் கைகளெங்கே! சரி யிருக்கட்டும். பிலவேந்திரா! உன்னோடு ஒரு காரியம் பேசவேண்டியிருக்கிறது. எல்லாரையும் அனுப்பிவிடு.

(எல்லாரும் செல்லுதல்)

சிமி: மகனே! உனக்குக் கல்யாணம்செய்யக் காலஞ்சமீபித்ததல்லவா! வேந்தர்களுக்கெல்லாம் மணவோலையனுப்பி அரசர்குலக் கன்னிகைகளை இங்கு வரும்படி திட்டஞ்செய். உனக்குப்பிரியமான சுந்தரவடிவுள்ளவளை மணந்துகொள்ளலாம்.

## பிலவேந்திரன் தரு.

மீனாட்சிராமனுவேதாந்தே என்றமெட்டு.

தாதா தயைபுரிவீ ரிந்த வேளை

1. தந்தை யுமக்கருப்பம் தனயனுக்கோ விருப்பம்
தாரகை சுந்தரியையே யானு மே மணந்திட வேணுமையா—தாதா

2. மங்கையிவள்மேல் நேசம் மணந்திடேல்யான்சந்யாசம்
மாறாதென்மன மேமகிழ்ந்திட வேகிருபை செய்யவேணும்—தாதா

பில: தந்தையே! நான் கானகத்தின்று கொணர்ந்த ஞானசுந்தரியைத்தவிர வேறெந்தக் கன்னிகையையும் மணந்துகொள்ளவே மாட்டேன். தயவு செய்து என்பேரில் கிருபைகூர்ந்து எனக்கவளையே கல்யாணம் செய்து வைக்கவேண்டும்.

## சிமியோன் தரு.

சிதம்பரதரிசனமோ என்றமெட்டு.

கலியாணக் காரியமே—நீ யதைக்
கவனிக்காதிருக்கலாமோ—அடேமைந்தா

குலநலமறியாப்பெண் குணந்தெரியாமுன்னர்
குறித்திடல்ஞாயமோ வரித்தலபாயமே
உளராதே மனந் தளராதே—அடா
ஊக்கமதைவிடு ஆக்கமொன்றேதேடு—கலி
அங்கங்குறைவுபட்ட மங்கையைமணந்திடல்
சங்கைக்கிழிவாமே சாற்றுதல் பாவமே
விள்ளாதேசொல்லைத் தள்ளாதே—அடா
வேறுனக்காயிரம் வனிதையரிங்குண்டு—கலி

சிமி: அடா மைந்தா! நீ சொல்வது நமது குலத்துக்கும் அந்தஸ்துக்கும் தக்கதல்லவே. அவள் குலமும் குடும்பமும் தெரியாமலிருக்கும்போது அவளை மணந்தால் ஊரார் நம்மை இகழ்ந்து பேசுவார்களே! அவளைவிட எவ்வளவோ அழகுள்ள அநேக பெண்கள் உயர்குலத்திலில்லையா? வேண்டாம் மகனே! அவ்வெண்ணத்தை விட்டுவிடு.

பில: அப்பா! நீங்கள் என்ன சொன்னாலும் வருத்தப்பட்டாலும் ஞானசவுந்தரியைத்தவிர வேறெந்தப்பெண்ணையும் மணக்கவே மாட்டேன். இது சத்தியம்.

சிமீ: மகனே! இதென்ன பிடிவாதம். சரி! உனக்கிஷ்டமானபடி செய். பின்னாலேதும் கஷ்டம் வரக்கூடும். நல்ல காரியத்தில் நானேனுனக்கு விசனத்தை யுண்டுபண்ணவேண்டும்? என்மீது குற்றமில்லை மகனே. நான் சொல்லவேண்டியதைச் சொல்லிவிட்டேன். உனக்குப் பிரிய மானால் மணமுடிவுபெறுவதற்குவேண்டிய ஏற்பாடுகளைச் சீக்கிரம்செய்.

## Scene 9.

### தேவமாதாகோவில்

[கலியாணம்.]

[மணமக்களும் மற்றோரும் குருவோடு கோவிலுக்குப்போய் முழங்காற்படியிட்டு ஜெபித்து மணமுடித்தல்]

### தெய்வதுதி.

சிலம்புதங்கம் ஜோதிநிறைந்திடும் என்றமெட்டு.

1. படித்த சுருதியி லுறுதியுடனேபர மேகக்காருண்யனே வுன்
பாதார விந்த மடியேன் பாதுகாபாவிக் காதாரம் நீயே எளியேன்

2. முடித்த மணமிதில் மனமகிழ்வோடும ணாளர்க் கருள்புரிவாய்
மூதுணர்வுற்ற மரியே கன்னிமரியே மூலப்பொருட்கோ ரரியே

3. நடித்த மணவா ளன்மணவாட்டியும் நேயநற்பத்தியுடன்
நாதா நீடூழிவாழ புத்திரபாக்யம் பெற்று சுகித்துவாழ.

## Scene No. 10.

(தருமராஜன் துருக்கி சுல்தான் அனுப்பிய கடிதத்தை வாசித்து மனங்கலங்கி மந்திரியிடம் யோசனை கேட்டல்.)

சோமசேகரானநுஜும் என்ற மெட்டில் பின் மதுடம்.

தேசிகதோடி—ஆதி.

தரு: தூதுவன் துருக்கிதேசம் நின்று நின்று—கூ
சாதுசுல்தான் லிகிதங்கொணர்ந்தா னின்று இன்று—அதில்
தடையிலாதுமே படைகளோடுன
திடைவரவொருவிடைகொடெனவே—தூது

மந்: போர்புரியத் தீவிரமாய் வாரும் வாரும்—என்று
சோர்வின்றி யென்சொற்படியே கூறும் கூறும்—அடி
யோடழியப்போ ராடப்பின்மனம்
வாடப்படைக ளோடவே பெரும்—போர்

தரு: மகளிழந்தேன் மனமுடைந்து வாடிவாடி—புள
சுகங்குறைந்து மெலிந்தோ னென்னைத் தேடித்தேடி—வந்த
சமயமிதனி லுமதுபாரிச
மமரவேபய மறவுரையேழை—மக

மந்: அஞ்சுவதேன் நெஞ்சதனி லூன்றி லூன்றி—சற்று
மிஞ்சிடிற் பிலவேந்திரன் நன்றி நன்றி—செய
தினஜெயமுற மனதுடனுள
கனமனுடரோ டெனதிடமேக—அஞ்

தரு: மந்திரி! என் அருமைப்புதல்வி ஞானத்தை யிழந்து அதிக மனக்கலக்க முற்றிருக்கும் இச்சமயத்தில் துருக்கி சுல்தான் நம்மைப் போருக்கழைத்திருக்கிறான். இக்காரியம் ஆறிவரும் புண்ணில் குச்சியை யெடுத்துக் குத்துவதுபோலிருக்கிறது. என் செய்வேன்! ஈசா! எனக்கு ஒரு யோசனையுமுதிக்கவில்லையே! ஆ! பரமநாதா!

மந்: அரசே! சிமியோனரசனுக்குத் தெரிவிக்கும் பட்சத்தில் கட்டாயம் தன்னுடைய புத்திரன் பிலவேந்திரனை நமக்கு உதவிக்கனுப்புவாரென்பதிற் சந்தேகமில்லை. ஆபத்திலுதவக்கூடியவர். ஜெயம் நமதுபக்கமே திரும்புமரசே! என் பயப்படவேண்டும்.

தரு: மந்திரி! சரிதான். இது நல்ல யோசனைதான்! இதோ அப்படியே கடிதம் எழுதுகிறேன்.

## Scene No. 11.

### எகிப்துதேசம்.

### சிமியோன் அரண்மனை.

[தருமருடைய கடிதத்தைக்கண்ட சிமியோன் பிலவேந்திரனையழைத்து வாசிக்கச் சொல்லல்.]

விருத்தம்

பிரிய நேசனுன சிமியோனுக் குரிமை யுடன்
அரிய ரோமை யரசனு னனுப்பு வோலை காண்க
துரிதமாய்ப் போர்புரியத் துருக்கித் தளகத்தன் வந்தான்
பரிவுட னெனக்குப் பிலவேந்திர னுதவி தாரும்.

பில: அப்பா! ஆபத்துக்காலத்தில் உதவிசெய்யவேண்டியது நம்முடைய கடமையே! எனக்கு உத்தரவு கொடுங்கள். நான் சந்தோஷமாய்ப் போய்வருகிறேன்.

சிமி: போய்வா! என்னருமை மகனே! நீ நமது சேனைகளோடு போ. கடவுள் நமக்கு ஜெயத்தைக் கொடுப்பார்.

[பிலவேந்திரன் பெற்றோரிட முத்தரவுபெற்று சுந்தரியைக் கிட்டிச்சேரல்]

அடுக்குமல்லிகைதொடுத்த என்ற மெட்டு.

செஞ்சுருட்டி.

பில: அழகு சுந்த ரியா மிளங் குயிலே—அன்புடனுன்னை
அண்டினேன் மணங்கொண்ட மாமயிலே—எனை
வருந்தினாரும் தருமரெந்தனின்
வருகையைக்காண மருகநீவிடை
கொடுத்திட வுனை யடுத்தே னிக்ஷணமே—கட்டாயமிதைத்
தடுத்திடிலெனைப் புண்படுத்திடுமே

ஞா: கணவனேயுமைக்கணமேனும்பிரியேன்—ஏதோ தெரியேன்
இணங்கியே யிதற் கிசைந்தொன்றும் புரியேன்—உற்ற
காரணமதைத் தோரணமுடன்
பூரணமாகப் பகர்ந்திடாவண்ணம்
தருமருந்தனை வருந்தினரென்று—என்னிடஞ்சென்று
உருமியேவிடை கருதல் நன்றன்று

பில: துருக்கியரசன் தருமராசனை—போருக்கழைக்க
உருக்கமாயென் னுதவியோசனை—பெற
விருப்பமாயவன் செருக்கையொறுக்க
முறுக்குடனரு வருப்புமூண்டு
திருவுருசருவேஸ்பானுதவி—தருவாரெமக்குப்
பெருமையுடன் பேரானந்தப்பதவி

ஞானம் தரு.

நடந்ததென்னசொல்லம்மா என்ற மெட்டு.

சுத்ததேசி

பிராண நாதா பகர்வேன்—எனைப்
பிரிந்திடில்யான் சோர்வேன்
இரும்படிக்குமிடத்தில் ஈய்க்கென்னசோலி இறைவனே யெடுத்துரைப்பீர்
துருக்கியரசனுடன் தருக்கம்புரிவதேனோதள்ளியதைமறப்பீர்—பிராண

ஒண்டியாய்ப்பெண்ணைநீர் ஓரிடம்விட்டுப்போர்க்களம்போவீரேல்
அண்டுவதாரை அகதியாஞேரை ஆதரிப்பாருமுண்டோ—பிராண

காதலியையொரு சோதனைசெய்வது கணவனுமக்கழகோ
வாதனையாலே நான்வேகுதல்நலமோ விளம்புவீரிதுவழக்கோ—பிராண

ஞா: பிராணநாதா! ஏன் என்னேடு வாதாடுகிறீர்கள்? நான் இதுவரையி லடைந்த துன்பம் போதாதென்று இன்னுமென்னைத் துன்பப்படுத்துகி றீர்கள். நானெப்படித் தனித்திருப்பேன்? வேண்டாம் நாதா! என் னைக் கலங்கப்பண்ணவேண்டாம்.

ஐயா பழனிமலைவேலா என்ற மெட்டு.

சகாஞ—ஆதி.

பில: மாதே மதி மயங்கிடாதே—எனக்
கோதே கலங்கிட லடாதே
வாதே வேண்டாமதைத் தொடாதே—உனைத்
தீதே யணுகிடா திப்போதே

ஞா: மன்ஞ யென்ன மனக்கிலேசம்—யான்
நொந்து வருந்துத லுன் தோசம்
அன்னிய மானவொரு தேசம்—செல்ல
வந்திடிலேது செய்வீர் மோசம்

பில: அம்மா யேஞே யிப்பிடி வாதம்—எனக்
களித் திடுவாய் கட்டுச் சாதம்
இம்மனை நின்றவ் வாறோர் காதம்—சென்று
மகிழ்வுடன் வருவே னிம் மாதம்

ஞா: கைகளிழந்த பெருந்தோசி—யானே
கர்ப்பினி யா மென்பதை யோசி
பத்தா பிரிந்தாற் பரதேசி—யென்று
உத்தார முரைத்தேன் வாய் கூசி

பில: நேரம் நெருங்கின திப்போதே—யாதுங்
கோரஞ் செய்வ தெனக் கொப்பாதே
போரதிற் புகுதல் தப்பாதே—நீ
சோர மொழிகளைச் செப்பாதே

ஞா: பந்திக்குப் பரிவுடன் முந்து—பின்னு
மெந்தப் படைக்குமே நீ பிந்து
என்ற மொழிதனை யுகந்து—நீர்
நன்று நவிலுவீர் பகர்ந்து

ஞா: நாதா! கல்லென்றாலுங் கணவன், புல்லென்றாலும் புருஷன். ஆயிர மிருந்தாலும் கணவனுக்கெவரும் ஈடாவார்களோ? நானோ இப்பொழுது கர்ப்பினியா யிருக்கின்றேன். காங்களுமில்லை. நாதா வேண்டாம்! எனக் கிங்கு யார் உதவிசெய்யக்கூடும்?

மலடி வயிற்று மகன்போலே என்ற மெட்டு.

பில: கரங்க ளிழந்த காதலியே—யுனக்
கிரங்குவ ரெவரு மினிகலியே—தவிர்த்
தரவணைப் பவரென் தாய்தந்தையே—யிதுமிலையே

ஞா: விட்டயலூருக் கேகிடிலோ—யான்
கெட்டலைந்தினி யெனக்கார் குடிலோ—உமைத்
திட்டமாய்த் தாரகை தடுத்திடிலோ—ஏது மேற்படிலோ

பில: யார் செப்பிடினுமி க்ஷணப்பொழுதில்—யான்
போர்முனைக் கேகுவேனே பழுதில்—லாத
வார்த்தை விளம்பு வாயெ ளிதில்—அரைநொடியில்

ஞா: உலகினி லுமக்கிணை யாருண்டு—இன்னுஞ்
சில கிழமைக்குட் சிசுயீன்று—யான்
பலமற் றிருக்கவுன் பறப்பின்று—நன்றன்று

பில: மாதே! பயப்படாதே! யாதொரு கஷ்டமு மேற்படாது. சந்தோஷமா யிரு. என் தாய்தந்தைமா ருனக்குவேண்டிய சௌகரியங்களெல்லாஞ் செய்து உன்னைப் பக்ஷமாய்ப் பாதுகாப்பார்கள். நான் போய்ச் சீக்கிரம் வந்துவிடுகிறேன்.

ஞா: நாதா! போய்வாருங்கள்! கடவுள் உங்களுக்கு வெற்றி யருள்வாராக. சந்தோஷமாய்ப்போய் விரைவாய் வந்துவிடுங்கள்.

## Scene No. 12.

### போர்க்களம்.

தரு: மந்திரி! இதோ நமது பிலவேந்திரரும் வந்துவிட்டார். வாரும் பிலவேந் திரரே! நீர் எங்கள் நடுவே வந்ததே பாதிஜெயம் ஆய்விட்டதுபோலிருக் கிறது. துருக்கிரசன் நான் துயரமுற்றிருக்குஞ் சமயம்பார்த்துப் போ ருக் கழைத்தான்.

பில: அரசே! அஞ்சவேண்டாம். துலுக்கனுக்கவ்வளவு ஆணவமிருந்தால் வலுத்தவர்களாகிய நமக்கு எவ்வளவிருக்கவேண்டும். அவர்களை யடி யோடு தொலைத்து அவர்களுடைய இராஜ்யத்தையுங் கவர்ந்துகொள்ள ஆண்டவர் நமக்குத் துணைசெய்வார், தைரியமாயிரும்.

தரு: அர்ச்சியஷ்ட சேசு மரிமாதாவே! அடியேன் நிலைமையைக் கண்ணோக்கிப் பார்த்தருள்புரிய வேண்டும். சர்வேசுபரா! திக்கற்றவருக்குத் தெய்வமே துணை. உம்மையே நம்பியிருக்கிறேன். தேவமாதாவே ஜெயங்கிடைக்கும்படி அடியேனுக்கொரு வரமளிக்க வேண்டும்.

### சேசுமரி பிரசன்னம்.

தர்மராஜா! கலங்காதே! தவிக்காதே! எல்லாவற்றையு மறிந்தேன். நீ கேட்டபடி உனக்கு ஜெயத்தையு மளித்தேன். தைரியமாய்ச் சண்டை செய்.

தரு: பிலவேந்திரா! இப்பொழுது ஒரு காட்சி கண்டேன்.

### தருமர் தரு.

ஆண்டிப்பண்டாரம் என்ற மெட்டு.

ஈன்ற கன்னிமரி—யென்முன்
தோன்றினளறி—சேசுவை

சண்டையிற் சங்கடமே சற்றுமிலைசுல் தானைவெல்ல
மண்டை ரெண்டாயுடைந்து மாண்டிடுவா னென்றுசொல்ல—ஈன்ற

வெற்றிக் கொடி பறக்க வேதியன் செங்கோல் சிறக்க
புற்றிலுள்ள பாம்புபோலப் பற்றிசுல்தானையழிக்க—ஈன்ற

துர்க்கித் தளகர்த்தனுடன் துரிதமாகத் தர்க்கஞ்செய்ய
வர்க்க மதை வேரோடு வெட்டி வீணாய் நாசஞ்செய்ய—ஈன்ற

### பிலவேந்திரன் தரு.

இசைந்ததோளும் என்ற மெட்டு.

துணிந்து தர்க்கம் புரியுங் களத்தருகிற் சேர்வீரே—உடுப்
பணிந்து மனத்திடமுட னுட னட மாடி வருவீரே
தணிந்து போகுங் குணமொடு தர்க்கம் புரியாதீர்—பதம்
பணிந்து பரனையே அனுதினம் போற்ற ஓயாதீர்
துருக்கியன் கொடுக்கை யடுத்துப் படக்கெனவே யொடிப்பேனே-அவன்
செருக்கை யொறுக்கிக் கொடுமை படுத்தி யுயிர் மடிப்பேனே

[இருசேனைகளும் போர்புரிய தேவமாதா உதவியாலும் பிலவேந்திரன் உதவியாலும் தருமர் ஜேயம் பெற்றுக் கொடியை நாட்டத் துருக்கர் தோற்றுப்போய் ஓடுகிறார்கள்.]

## வெற்றியின் சந்தோஷம்.

கண்டா லானந்தமே என்ற மெட்டு.

என்ன பேரானந்தம் இயம்பிடச் சதானந்தம்
கன்னிமரி தேவதையின் காட்சிப்பய ளுய்விளைந்த—தென்ன
வந்தார் விரோதிகளே வரிசை வரிசையாய்
முன்னுல் நின்ருரடுக்கா யதி விமரிசையாய்
முந்த முழங்கின தெக்காளம் பெரு மோசையாய்
பின்பு போரும் புரிந்து ஜெயம்பெற ஆசையாய்
செத்தனரே எத்தனையோகோடி—கொஞ்ச
மெத்திசையிலுஞ் சிதறியோடி—மிஞ்சும்
பத்திலொரு பங்கெமையே நாடி—வந்து
நத்தியே புகழ்ந்தர் மாலைசூடி
ஆவ லுடனே கூடி
தேவன் பதமே தேடி
சேவடி புகழ் பாடி
சந்தோஷமாய்க் கொண்டாடி—மிது

## Scene No. 13.

[ஞானசுந்தரிக்குக் குழந்தைபிறந்த செய்தியைக்கொண்டுவரும் தூதனை லேனுள் அழைத்தல்]

**லே:** அடா தூதுவா! எங்கே வேகமாய்ச் செல்லுகின்ருய்? யாரைத்தேடுகிருய்? என்ன அவசரம்?

**தூது.** நீ யாரம்மா? என் அவசரமென்ன! சும்மா கூப்பிட்டுக்கிட்டு சும்மாயிரம்மா. எங்க ராசாமகன் பிலேந்திரன் எங்கே?

**லே:** சங்கதியை என்னிடம் சொன்னுல் அவரிருக்குமிடம் நான் சொல்லுகிறேன்.

எனையாண்டவா என்ற மெட்டு,

சிந்துபைரவி—ஏகம்.

**லே:** அடே தூதுவா சேதிசற்றிங் கோதுவாய்
வாதுசெய்யாது நீயேதுகொண்டேகிருய்
சேதிசற்றிங் கோதுவாய்

**தூது:** என தம்மணி சொல்வேன் கோ பமேதணி
கொண்டதை விண்டபின் மீண்டும் மிடமே
சொல்வேன் கோ பமேதணி

லே: நல்ல காரியம் உந்தனுட வீரியம்
நேயா வுன்வாயா லோயாதே யுரைப்பதே
வுந்தனுட வீரியம்

தூது: பில வேந்திரன் தேவியுருவே சந்திரன்
பாலரிக்காலைல் வேளையில் பெற்றயெம்
தேவியுருவே சந்திரன்

லே: அவள் பேரென்ன பாவி யிருந்த ஊரென்ன
மேவிநீ கூவிடுன்தேவி யுருவென்ன
பாவி யிருந்த ஊரென்ன

தூது: ஞான சுந்தரி பேருக் கிசைந்த சுந்தரி
இரு கரமு மிழந்திடி னுமவள்
பேருக்கிசைந்த சுந்தரி

லே: அப்படியா! தூதுவா! பிலவேந்திரன் யுத்தகளத்தில் இருக்கிறார். போய் அவரிடம் கடிதத்தைக்காண்பித்து பதில்கொண்டுபோகும்போது என்னிடம் வந்துவிட்டுப்போகவேண்டும். எனக்கு நீ கீழ்ப்படிந்து நான் கேட்ட கேள்விகளுக்குப் பதில் சொன்னதினுல் உனக்குத் தகுந்த வெகுமானமளிக்க உத்தேசிக்கிறேன். கட்டாயம் வரவேண்டும்.

லே: அம்மணி! சந்தோஷம். கட்டாயம் வந்துபோகிறேன்.

[தூதுவன் செல்லுதல்]

## லேனுள் தரு.

மன்றுளாடியவா என்ற மெட்டு.

தேசிகதோடி—ரூபகம்.

என்றும் வா தனையா ஈசா இன்றும்சோ தனையா
அன்று சென்ற தொல்லை மீண்டுமென்மீது படுதலாலே—என்றும்
சக்களத்தி மகள் செத்தா ளென்றிருக்க
தக்க சிட்சைசெய் திருகாந் தறிக்க
மக்க ளுடனேமா ளிகைமீ திருக்க
படபடவென மனதுடனே
அடிபட யிடந்தர விடேனே—என்றும்
காற்றுள்ளபோதிதைத் தூற்றிடல் ஞாயமே
ஏற்றவிதஞ் செய்வேனிதற் குபாயமே
சாற்றிடில் வந்திடுமின்றே லபாயமே
கனசின மனதென திப்போ
துனியினி நனிவது மெய்போ—என்றும்

**லே:** அடி பாதகி ! ஐயோ ! சண்டாளி தொலைந்து விட்டாளென்றல்லவோ தலைமுழுகியிருந்தேன். அப்படியிருக்க இப்பொழுது குழந்தைகளைப் பெற்று மாளிகை மீதல்லவோ இருக்கிறாள். சரி! உன்னுயிரைவாங் காவிடில் நான் அரசியா ? அடி நீலி ? இன்னும் உயிரோடிருக்கிறாயா ? பார்ப்போம் ஒருகை.

## Scene No. 14.

### யுத்தகளம்.

**பீல:** வாரும் தூதுவரே! ஏதாவது நற்செய்தியுண்டா ?

**தூது:** வந்தனமரசே ! ஆம் ! நற்செய்தியே கொண்டுவந்தோம். இதோ கடி தத்திலெல்லா மிருக்கிறது. பாருங்கள்.

[கடிதத்தை வாசித்தல்]

விருத்தம்.

பிரிய மைந்தனே யுனக்குப் பேரானந்த சேதி
தெரிவிக்க யிக்கடிதந் துரிதமாய் வரையலானேன்
அரியஞான சுந்தரி அருமையாயிரு பாலர் பெற்றாள்
சொரிந்திடவே சுகிர்தமழை சடுதியிலிங்கு செல்வாய்

**பீல:** ஆ! மெத்தச் சந்தோஷம். இரட்டைக்குழந்தைகள்-ஆண்குழந்தைகள்! ஆ ! என் கண்மணிகளே! நான் சீக்கிரம் வந்து உங்கள் முகங்களைப் பார்த்தானந்திக்கிறேன். தருமரே! பார்த்தீரா ! எனக்குக் கடவுள் கிரு பையால் இரண்டு ஆண்குழந்தைகள் பிறந்திருக்கின்றனவாம்.

**தரு:** ஆகா ! சந்தோஷம் ! பிலவேந்திரரே ! நமக்கு அத்துடன் வெற்றி கிடைத்தது இன்னுமதிகச் சந்தோஷம். நானோ அருமையாய் வளர்த்த குழந்தையையும் பறிகொடுத்துவிட்டுப் பிள்ளைப்பாக்கியமின்றித் தவிக்கி றேன். ஆகவே எனக்கு ஆறுதலாக உம்முடைய மனைவி மக்களோடு என்னை வந்து பார்த்துப் போகும்படி கேட்டுக்கொள்ளுகிறேன். அவர் களைக் கண்டாவது ஒருவாறு நான் ஆனந்தமடையட்டும்.

[தூதுவன் லேனாளிடம் போக அவள் மதுபானத்தைக் கொடுத்து மயக்க முண்டுபண்ணி அவனிடமிருந்த கடிதத்தை யெடுத்து வாசிக்கிறாள்]

விருத்தம்.

அப்பனே கடிதங்கண்டு அடங்கொணாக்களிப்படைந்தேன்
ஒப்பிலாப் பாரிபால ரொழுங்குடனுபசரித்து
செப்பிடுவீர் செம்மொழியே சிறப்புட நானுமங்கு
தப்பாது வந்திடுவேன் தாமதமிங் கேதுமின்றி

**லே:** அடி நீலி! சுந்தரி! உன் கணவன் உன்னையும் உன் மக்களிருவரையும் வந்து பார்த்து ஆனந்தமடைவதா யெழுதியிருக்கிறார். சண்டாளி! நான் உன்னை உயிரோடு வைத்தாலல்லவோ உன்னைக்கண்டு அகமகிழ் வடையப்போகிறார். இவளை உயிரோடு வைத்தால் நம்முடைய கழுத் துக்கு எப்பொழுதாவது கத்திவைப்பா ளென்பதிற் சந்தேகமில்லை. உன்னைக்கொல்லாவிடில் என் பேரை மாற்றிவிடடி நீலி! தற்சமயம் இக்கடிதத்திலுள்ள சிலவார்த்தைகளை மாத்திரம் மாற்றி இவனை அனுப் பிவிடுவோம். பிற்பாடு காரியம் எப்படி முடியுமெனப் பார்ப்போம்.

விருத்தம்.

அப்பனே கடிதங்கண்டு அடக்கொணாத்துயரடைந்தேன்
ஒப்பாதென் பாரிபாலர் உயிரையுடனேமாய்ப்பீர்
செப்பினேன் கொல்லாவிடிலோ சேர்ந்திடேனெனதுமொழி
தப்பாது செய்திடுவீர் தர்மதமங்கேதுமின்றி

[தூதுவன் மயக்கந்தெளிந்து எகிப்துதேசம் நாடிச்செல்லுகிறான்]

## Scene No. 15.

### சிமியோன் தர்பார்.

[பிலவேந்திரன் கடிதங்கண்டு சிமியோன் கலங்குகிறார்.]

வயிறு பசிக்குதே என்றமெட்டு

ஐயோ பாபமே பரி தாபமே
வனிதையுடனிம் மணிகளிருவரை
மனந்துணிந்துயிர் மடித்தலே பெரும்—பாபமே

என்ன சோதனை மன வேதனை
பாலனனுப்பிய வோலை காணவே
சீலமனையாளு மோலமிடுவாளே—சோதனை

கெட்டகாலமே அலங்கோலமே
தடுத்துமிவளையே அடுத்தமகனிப்போ
படுத்தும் விதமென்ன விடுத்தும் வழியென்ன—பாபமே

**சிமி:** ஐயோ ஜெகதீசா! இதென்ன கடிதம் இப்படி யெழுதியிருக்கிறானே! யாது குற்றஞ்செய்தனள். பாபம்! பிள்ளைகளுடன் இவளைக்கொல்ல யார் மனந்துணியும்? சேசுமரி மாதாவே! நீயே எனக்கொருவழியைக் காட்டவேண்டும். என்ன சங்கடம். எனக்கொன்றுந் தோன்றவில்லை யே ஆ! ஈசா!

[ஞானத்துக்குக் கடிதத்தைக்காட்ட விழுந்துபுலம்புகிறாள்]

ஞானம் தரு.

ஆயனுதான்பிரஸ்காந்தே என்றமெட்டு.

பியாகு—ரூபகம்.

1. பிராணநாதா என்ன வாதா பாதுகாத்தலாகாதா
திராணியற்ற பிராணியெனைத் தவிக்கவிட லுன்சூதா
2. ஐயோதேவா யெனைக்காவா ஆறுத லளிக்கவா
துன்பமிப்போ தென்மீதேனோ தாரகைக் கருள்தாதா
3. கானகத்தில் நானலையக் கூட்டிவந்த காதலா
இன்னலெனக் கின்னுமேனோ இயம்பிட லாகாதா

ஞா: மாமா! என்செய்வேன்! ஐயோ என்னைக்கொல்ல நானென்னகுற்றஞ் செய்தேன்.

சிமி: அம்மா ! நானென்னசெய்வேன். உன் கணவன் தானே யிப்படி எழுதியிருக்கிறுன். இதோ பார்.

தென்றலைக்கண்ட துயில்களுக்கென்ன என்றமெட்டு

ஞா. ஐயையோ யெந்தனுக் கிந்தவிதி வரலாமா—அன்புமிகுமாமா—இதென் கணவனெழுதிய கடிதமென்றதுண்மை யாமா

சிமி: பாலனனுப்பிய வோலையைப்படித்துப்பாராய்-பெருந்துயர்தீராய்-என்ன காலமிதோ வுந்தன் கணவன்கையெழுத்துப்பூராய்

ஞா: அடவியிருந்திட்டபோ திதையறிந்தேனுகில்--என்னுயிரேசாகில்-இந்த மடமைதடமிந்தவிடம் படாதென்காயம்நோகில்

சிமி: மருமகளேநீ மயங்குவதால் மனஞ்சோர்ந்து—அதனையாராய்ந்து—மெழு குருகுவண்ண முருமாறி வருந்தினேன் தோய்ந்து

ஞா: குழந்தைக ளோடென்னைக் கொல்லநினைப்ப தடாதே—குற்றமும்விடா வழகிய பாலருக்கந்யாயஞ்செய்யப்படாதே [தே—இவ்

சிமி: மைந்தன் மொழிமீறமீண்டிங்குதிரும்புவானே-[அ]து விரும்புவானே—சுந்தரியேயுனைச் சஞ்சலத்திலாழ்த்துவானே [எந்தன்

ஞா: மாமா! என்முகத்தைப் பாராவிடினும் இச்சிறுபாலர் முகத்தையாவது பார்த்து மனமிரங்கக் கூடாதா?

சிமி: மருமகளே ! உன் நாயகனது கடிதம் இப்படியிருந்தும் உன்னைக்கொல்ல எனக்கு மனமில்லை. ஆகையால் பிள்ளைகளுடன் உன்னைக் காட்டுக்கு

அனுப்பிவிடுகிறேன். இன்றேல் என் மகன் வீடுவந்து சேரமாட்டான். இதைத் தவிர்த்து என்னுலொன்றுஞ் செய்யமுடியாது. கடவுள் உன்னைக் காப்பாரம்மா! என் செய்வோம்! விதியின்பயனை யாரால்வெல்ல முடியும்?

## ஞானம் தரு.

ஜோர்தூர என்றமெட்டு.

சிந்துபைரவி—ரூபகம்.

1. மாமா வே யென் முகம்பாரும் ம ருமக ளைக்காரும்
எமாந்தே னென் மகன்மொழிக் குகந்து வந்ததால் நேர்ந்தபழி—மாமா
2. பாலர்முகம் பார்த்திரங்கிப் பாதுகாக்க வேணுமே
பாலருந்த வோலமிடும் போதென்னசெய்வது பாவிக்கோ கையில்லை—மாமா
3. காட்டுக்கென்னை யோட்டிடயா னென்னகுற்றஞ் செய்தேனே
கேட்டைநினைப்பூட்டுதையோகட்டாயம் வேண்டாமேகெஞ்சுதல்கேட்பீரே [—மாமா
4. ஆதரவில் லாதவர்க்கு ஆண்டவாநீ ரேதுணை
நாதனெனைக் கைவிட்டாலும் நம்பியவர்க்கன்னைமரியம்மைபிணை—மாமா

ஞா: மாமா! என்னை மக்களுடன் கானகமனுப்புவதைவிடத் தாங்களே என்னைக் கொன்றுவிடில் நலமாயிருக்கும். கைகளின்றி எப்படி யிக்குழந்தைகளைப் பாலூட்டி வளர்த்துப் பராமரிப்பேன்.

சிமி: அம்மா! நீயிப்படிப் புலம்புவதில் ஒன்றும் பிரயோஜனமில்லை. சர்வேசுபரன் உன்னைக் காப்பார். கண்மணிகளோடு மனம் வருந்தாது செல்லம்மா!

[ஞானம் செல்லுதல்]

## ஞானம் தரு.

சுனப்பியாரி மோகனு என்றமெட்டு.

மனோ கரனே காராயோ—கடைக்
கண்ணால் பாராயோ

பாவியானிப் பூவின்மீது படுந்துயர் பரிதாபமே
தாவியும்மைத் தஞ்சமென்றோர்க் கருள்புரி பச்சாதாபமே—மனோ

பாலருந்த வோலமிடும் பாலருக்கென் செய்வேனோ
தாலமிதிற் கைகளின்றித் தாரகையெங் குய்வேனோ—மனோ

சிங்கம் ஓநாய் புலிகரடி சீறுதே பயமாகுதே
சங்கடமே அங்கமெல்லாம் சோருதே வுருமாறுதே—மனோ

## Scene No. 16.

### ஆரண்யம்.

### ஞானம் தரு.

ஆதிகங்கனயானே என்ற மெட்டு.

கமாஸ் ரூபகம்.

வேதமுதல்வா வந்தருள்தாவா—எந்தன்
சதிபோ மதிதா துதிவீழ்ந் தடியேன்
கதி பெறவே ததி—வேத
தூய செங் கோலா தீயரைக் காவா
மாய மான யிம் மானிடரின் மூவா
சேய ரெமை யேசீர் தூக்கியாள் தேவா
அனு கூலனனே பரிபாலனனே
குண சீலனனே திருவுரை—வேத
பாவி யெந்தனைப் பாது காக்கவா—பாழும்
புவியிற் றவியா தவியா தெனையாள்
சவிபெறதா செவி—பாவி
பாலருடனே ஓலமிட்டேனே
தாலமாமிதிற் றாவிக்கும்பிட்டேனே
காலகோலத்தா லலங்கோலப்பட்டேனே
வினைதீர்ப்பவனே யெனைக்காப்பவனே
மனைசேர்ப்பவனே திருவுரை—வேத

ஞா: ஈசா! என் செய்வேன்! யாருமில்லா யிக் கானகத்தில் என்னைத் துரத்தி விட்டனரே! கைகளின்றி யிக் குழந்தைகளைத் தூக்கியெடுத்துக் காப் பாற்றுவ தெப்படி? ஈசா! இதுவும் நின்னருளோ?

### ஞானம் தரு.

இராம பஜனை கோரியாம் என்ற மெட்டு.

பூரண கிருபை வாசா பவ விமோசா
ஆரண் யந்தனில் விட அடியா ளவதிப்பட
காரணங் கூர்சர் வேசா—பவ விமோசா

துஷ்ட மிருகங்களுடே தவித்தல் பாடே
கஷ்டப் பட விதியோ கன்னிக்கே ணிச்சதியோ
இஷ்ட மெப்படியோ ஈசா—பவ விமோசா

ஞா: ஆ! ஜெகதீசா! இதுவும் நின் திருவருளோ! பிள்ளைகளுடைய பரிதாப கோலத்தைப்பார்க்க என் மனஞ் சகிக்கவில்லையே! ஆ! தேவ தாயே! நீயே யெனக்குத் தஞ்சம்.

[முனிவர் பிராப்தம்.]

**மூனி:** ஆ! இதென்ன! இக் கானகத்திலேதோ வோரழுகுரல் கேட்கிறதே! ஐயோ! இதுவும் பெண்குரல்போ லிருக்கிறது. சற்று அருகிற்சென்று பார்ப்போம்.

முனிவர் தரு.

மயிலே வடி வேல னே டேதிர் என்ற மெட்டு.

மால் கோஷ்—சாப்பு.

தனியே யொருதா ரகை தவிப்ப தென்ன
அனியாய மிந்த அடவியில் நொந்த
வனிதையை வின வினல் விளம்புவாளே—தனியே

அரிய பாலர் பெற்று அருகில் நிந்தையுற்று
உரிய கரங்க ளிரண்டுமே யற்று—தனியே

[முனிவர் ஞானத்தை விசாரித்தல்.]

முனிவர் தரு.

இங்கிலீஷ் நோட்—ஆதி.

ஆரண்யத்தில் நீயாரு தூரம் வந்த விதி கூறு
ஊரென்ன பேரென்ன உற்றோர் யார் பெற்றோர் யார்

ஞானம்.

தந்தை தாய் பேருமறியேன் நொந்தவித மதையே விரியேன்
சுந்தரியா மெந்தன்பேர் சுற்றோரையே தெரியேன்

முனிவர் தரு.

கனிகளைப் பறித்துநான் என்ற மெட்டு.

கன் னிகை யேதலங்காதே—மரி
அன்னையை மற வாதே
என்னுடன் நீயும்
உன்னிரு சேயும்
வகையாய்க் குகையில் சுகித்திடவா—கன்னி
கவலைக் கிடங் கொடுக் காதே—இத்
தவர் மொழி தடுக் காதே
அவணியா ளளிக்க
புவனியிற் களிக்க
பரனே வரமே புரிந்திடுவார்—கன்னி

முனி: அம்மணி! நீ யொன்றுக்கும் கவலைப்படாதே. என் குகைக்கு என்னோடு வா. உன் குழந்தைகளையும் உன்னையும் சந்தோஷமாய்ப் பராமரிப்பேன். என்னோடு வர ஏன் கலங்குகின்றாய்? சும்மா வா அம்மணி! வருந்த வேண்டாம்.

முனிவர் தரு.

அடே நந்தா வுனக்கிந்த மதி என்ற மெட்டு.

அடி மாதே வருந்தாதே யினித்தீதே யிராதே
எண்ணிக் கண்ணீர் விட்டழுகும்—மாதே

என் னோடே நீகூட எகிட லடாதா
இன்னலின்றி நன்றிருக்க—மாதே

ஞா: முனிவரே! உங்களுடனே கூட வருகிறேன். தாங்களே என்னையும் இக் குழந்தைகளையும் காப்பாற்ற வேண்டும்.

[இருவரும் செல்லுதல்.]

## Scene No 17.

முனிவர் குகை.

ஞானம் தரு.

கலிலோ ஹரிஸ் என்ற கீர்த்தனை மெட்டு.

காப்பி—ஆதி.

குருவே பவமேக மோகமுள மரியின் மனுட வுருவே—பரமஞான
கிருபாகர வரந்தருஞ் செருவே
திருவிருந் தருட்கருவே—பவிகட் கொரு

1. கொடியதொரு பிணியால் வருந்திடு மடியாட் களித்திடவே நன் மருந்து
துடிதாய் நோய் மடிந்திட விருந்து கொடுத்திடு மனமுகந்து தயை பொ
[ருந்தும்—குருவே

2. ஜீவ வழிகாட்டுங் குருநீ ஞானப்பாலூட்டுங் குருநீ
பாவ யிருட் தரணி குருநீ பரந்தர வுருங் குருநீபரம ஞானி—குருவே

ஞா. அர்ச் சியஷ்ட தேவ தாயே! திக்கில்லாதவருக்குத் தெய்வமே துணை. நீ தான் என்னைத் தற்காக்கவேண்டும். உன்னையன்றி இவ் வுலகி லெனக்கு வேறொரு துணையுமில்லை. இக் குழந்தைகளைக் காப்பாற்றுவது உன் கடமையே. நான் என் செய்வேன் அனுதை! ஈசா! நின் சித்தப்படி ஆவதாக.

## ஞானம் தரு.

சதாதுதிக்க மதுரையைப்போல் என்ற மெட்டு

தாணியோர்கள் தினந்துதிக்குந் தாய்மரி நீயே
பூலோக மேலோகம் போற்றிப் புகழ்பெற்ற—தாய்
கன்னிப் பருவத்திற் கற்புநிலை யுற்ற—தாய்
தெய்வ சுதனீன்று ஞான வுய்வுடன்பேர் பெற்ருேளான—தாய்
அடியார் குறைநொடி நீக்கநிறை துடிதாய்ச் செயுமடியாள்—தாய்
தத்வமா வேதத்தையொரு சுத்தமாக நித்தங்கற்று வித்வஞானத்தீபமான—
கரமிரண்டு மிழந்தபாவி கருணைகொண்டுகா யுன்னுவி [தாய்
கண்ணீ ராருயூற்ற நாவில் வறட்சியற் றுணர்ச்சியற்றேன் வல்ல
[மாதா வரத்துக்குற்றேன்—தாய்

தினம் பணியக் கருணைவாய்ந்த சேசுநீ யல்லோ
பாவிகட் காய்ப்பூவிற் பாலனுய்ப் பிறந்த—சேசு
திட்டடி பட்டுயிர் விட்ட கிறிஸ்தையன்—சேசு
சென்ற மூன்ரும் நாளுயிர்த்த அன்றேசாவின் கூரொடித்த—சேசு
சருவேஸ்பர னெருவனெனத் திருவுருவாய்ப் பரமடைந்த—சேசு
சுத்த போதகத்தை யோதி நத்தினேர்க்குப் பத்திமூட்டி முத்தியே கொடுத்
[தருளும்—சேசு

சிசுவுடன்யான் மாளக்காலம் நெருங்கிற்றே யிதலங்கோலம்
நேயனே கேளா யெம் மோலம் தோத்திரந் துதியடியாளுனை
நேர்த்தியாய்ப் போற்ற வரந்தரும்—சேசு

## தேவமாதா பிரசன்னம்.

சுந்தரியே! உன் வேண்டுதல் கேட்கப்பட்டது. உன் னிருகரங்களும் வளர்ந்து பழைய உருவத்தையடையும்படி உனக்கு வரமளித்தேன். இப்பொழுது உன் கையை நீட்டு. ஆண்டவருக்கு ஸ்தோத்திரஞ் செலுத்து. இதோ இந்த அப்பங்களை உன் பிள்ளைகளுக்குக் கொடு. சந்தோஷமாயிரு. நான் போய் வருகிறேன்.

4 2 4

### ஞானம் ஸ்தோத்திரஞ் செலுத்தல்.

அழதழ தேக் கோப் பியாரி என்ற மெட்டு

1. *தினமுனை நினைந்தடி கனிந்துப ணிந்தேன்*
   *மினவினே னுனையே கனவிலு மன்னையே—தின*
2. *திரு வுரு கருணைச ருவேஸ்பர நாதா*
   *அரு வா மளித்தா இரு கரம் வளர்த்தா—தின*
3. *பாடிப் பாடி க்கோ டிய டியாள் நமஸ்காரம்*
   *தேடி நின் ஆரம் தொலைத்தே னென் பாரம்—தின*

ஞா: *தேவதாயே! கனவிலு மறக்கமுடியாத யிப் பெருங்கொடைக்கடியாள் என்ன ஈட்டைச் செலுத்துவேன். பாத்திரமற்ற எழை ஸ்தோத்திரத்தை எற்றுக்கொள்ளவேண்டும். இதுவரை என்னைக் காப்பாற்றி இரட்சித்ததுபோ லினிமேலும் என் கணவனோடிருந்து வாழக் கிருபை செய்யவேண்டும். எல்லாம் தெய்வ சித்தத்துக்கு ஒப்படைக்கிறேன்.*

[குகைக்குட் செல்லல்.]

## Scene No: 18.

### சிமியோன் வீடு.

*[பிலவேந்திரன் போர்க்களத்தினின்று வந்து ஞானத்தைத் தேடுதல்]*

### பிலவேந்திரன் தரு.

என் கண்டமுந் துடிக்குது என்ற மெட்டு.

என் *அங்கமும் பதைக்குது*
*ஆவியுந் துடிக்குது*
*சுந்தரியைக் காணத்த விக்குது*
என் *மாட மாளிகையும்*
*கூட கோபுரமும்*
*தேடித் திரிகின்றேனிப் பாவியும்*
என் *கண்மணி ஞானமே*
*பெண்மணி காணேமே*
*எண்ணற் கரியபால ரோடுமே*

பில: *தந்தையே! வந்தனம். உங்கள் முகம் என் துக்கசாகரத்தி லாழ்ந்திருக்கின்றது. யாது காரணம்? ஐயோ! என்ன நேர்ந்தது? மைந்தனெனக்குக் கூறலாகாதா?*

## பிலவேந்திரன் தரு.

அச்சா மோரி லாதஜே என்ற மெட்டு.

*தோடி—ஆதி.*

*தந்தையேதற் காருமே தாபக மென் கூறுமே*
*கூறுமே கூறுமே கூறுமே—தந்தை*
*வந்தவினை யெடுத்துரைப்பீர் நொந்த விதமதை விரிப்பீர்*
*எந்தையே சிந்தனை மைந்தனுக் கேன் ஒளிப்பீர்—தந்தை*
*காதலி ஞான மெங்கே கண்மணிக ளிருவரெங்கே*
*சோதனைக் காதார வேதனை யுண் டோ யிங்கே—தந்தை*

பில: *அப்பா! என்ன மனக்கிலேசம்? எங்கே என் னருமை ஞானம்? கண் மணிகளிருவருமெங்கே? ஒரு சத்தத்தையுங் காணுமே! என் சத்தங் கேட்டவுடன் சுந்தரி யோடிவருவாளே!*

சிமி: *மைந்தா! என்னவார்த்தை யுரைக்கின்ருய்? என்னைச் சோதித்துப்பார்க் கின்ருயா? நீ யெனக்கு எழுதிய கடிதமென்ன நீ கேட்குங் கேள்வி யென்ன? பரிகாசம் செய்கின்றனையா? அல்லது எழுதினதையே முற் றிலும் மறந்து விட்டாயா?*

பில: *அப்பா! நான் என்ன எழுதினேன்? என்ன செய்தீர்கள்? ஐயோ!*

சிமி: *என் வீணுய் உளருகின்ருய்? புத்திதடுமாறிப் பேசுகின்ருய்போலும். இதோ உன் கடிதம். நீயே வாசித்தறிந்துகொள்.*

*[பிலவேந்திரன் படித்துப்பார்த்தல்]*

பில: *ஐயோ! [கீழே விழல்] மோசம் போனேனே! ஈசா! இது யார் செய்த மோசம்! ஐயோ! இரக்கமற்ற சண்டாளர்களே! என் னருமை ஞானத் தையும் இரு குழந்தைகளையுங் கொன்றுவிட்டீர்களா? ஆ! இனி யென் செய்வேன்! யாரோ நான் எழுதின வார்த்தைகளிற்சிலவற்றை அழித்து விட்டு மாற்றி யெழுதியிருக்கிருர்கள்! ஐயோ! இனி அரைக்ஷணமேனு மிவ்வுலகில் உயிர்வைத்திரேன். இதோ நானுந் தற்கொலைபுரிந்து என் னுயிரை மாய்த்துக்கொள்வேன்.*

*[கத்தியை யுருவி தானே குத்திக்கொள்ளப்போதல்.]*

சிமி: *மைந்தா! பதருதே! சற்றுப் பொறுத்துக்கொள். அனுப்பிய கடிதத்தி லப்படி யெழுதியிருந்தபோதிலும் எங்கள் மனங் கேளாமல் சுந்தரியைக் கொல்லாது குழந்தைகளுடன் காட்டுக்கு அனுப்பிவிட்டோம். நாங்கள் என் செய்வோம்! கடிதத்தின்படி நடக்க நாங்கள் கடமைப்பட்டிருக் கிருேமல்லவா?*

## பிலவேந்திரன் தரு.

### சுந்தரப் பியாரி என்ற மெட்டு.

தேசிகம்—ஆதி.

1. கண்ணே மறைந்தா யிப்போ கண்டு மகிழ்வ தெப்போ
பெண்மயிலே என் குயிலே பேதலிக்க விட்ட னையோ—கண்ணே

2. அன்னைபிதா சொல் மீறி அடுத்தே னுனையே கோரி
கன்னியுனை மணம் புரிந் ததால் வந்த விதி யறி—கண்ணே

3. க ரங்க ளற்றே வனம் கண்டே யிரங்கி மனம்
கொண்டு வந்ததா லிக்கனம் கணக் கடங்காவி சனம்—கண்ணே

4. பாலரைக் காணு முன்னம் புசித்திடே னேது மன்னம்
ஓலமிடக் காலமி தோ ஒப்பாரி யின்பயன் ஏதோ—கண்ணே

பில. ஐயோ! சுந்தரி! கைகளற்றவ ளாச்சுதே! என்னை யுத்தத்திற்குப் போக வேண்டாமென்று தடுத்தாளே! பாவி நான் அவள் சொல்லை மீறிப் போனதா லிப்படி நேர்ந்ததே! என் செய்வேன்! என் கண்மணி உயிரோ டிருக்கின்றனையோ! அல்லது பிள்ளைகளுடன் மாண்டாயோ! கானகத்தில் சிங்கம் புலி முதலிய துஷ்டமிருகங்கள் வசிக்குமே! ஐயோ! அவைகளுக்குத்தான் இரையாய்ப் போனார்களோ! ஒன்றுந் தெரியவில்லையே! ஈசா! என் மனந் துடிக்கின்றதே!

## பிலவேந்திரன் தரு.

### மாற்றறியாத செழும் என்ற மெட்டு.

சுருட்டி.

ஆற்றலுக் கடங்காத அருந்தவ மணியே
அகன்றனை யேனோ அகதியா னினியே
போற்றற் குரியபாலர் பெற்றபொன் மணியே
பொருகளம் போய்வருமுன் பறந்தயென் பணியே—ஆற்ற

கடித மெழுதிய கள்வனு மறியேன்
கணவ னின்றுபிரியக் காரணந் தெரியேன்
துடிக்கும் புதல்வரைத் தூக்கக்கை யிலையே
தரணியி லுயிருடன் தரித்தலு மிலையே—ஆற்ற

மக்களை யெடுத்து மார்பில ணைத்திட
மரகத முனையே மகிழ்வுட னெய்திட
தக்கவிதஞ் சிசுவைத் தாவியான் கொஞ்சிட
தருணங் கடந்ததே தரணியில் நொந்திட—ஆற்ற

பில: ஐயோ! இரு குழந்தைகளையும் பார்க்கக் கொடுத்துவைக்காத மாபாவி யானேனே! அப்பா! நான் இப்பொழுது உடனே கானகஞ்சென்று என் மனைவி மக்களைத் தேடிக் கூட்டிவருகிறேன். அவர்களைக் கண்டபின்பு தான் அன்னம் புசிப்பேன்.

சிமி: மகனே! நீ யிங்கேயே யிரு. வேண்டிய ஆட்களையனுப்பித் தேடிக் கொண்டு வரும்படி திட்டஞ்செய்வோம். களைப்பாறிக்கொள்.

பில: அப்பா! முடியவே முடியாது. நான்தான் கட்டாயமாய்ப் போய்வர வேண்டும். வேறொருவரும் அவசியமில்லை. அவர்களைக் கொண்டு வராமலிங்கு ஒருக்காலும் திரும்பவே மாட்டேன்.

[கானகஞ் செல்லுதல்.]

## Scene No. 19.

### வனம்.

### பிலவேந்திரன் தரு.

மானுமயானக்கரோ என்ற மெட்டு.

கானக மெங்குமே யான் காணேனே—ஜெக
ஜோதி நிதி ஜோபை சதியாளே
சுந்தரி யாளே ஜோதி மயாளே—ஜோதிநிதி

1. பாரி லெந்தனுக்கே பாரி யென்றிருந்தாய்
பாரகப் பாரத்தா லெங் கொளிந்தாய்—ஜெகஜோதி

2. நானிலந் தனிலே நானிருந் தென்ன
கானிலுனைக் காணக் கலங்குத லென்னே—ஜெகஜோதி

[பிலவேந்திரன் முனிவரைக்கண்டு தரிசித்து ஞானசவுந்தரியை உரோமாபுரி கூட்டிச்செல்லல்.]

## Scene No. 20.

### தருமர் அரண்மனை.

[தருமராஜன்முன் சுந்தரி தன் வரலாற்றை எடுத்துரைத்தல்.]

### ஞானம் தரு.

நொண்டிச்சிந்து.

என்னுடைய வரலாற்றை—இப்போ
எடுத்துரைப் பேனதை விரித்துரைப்பேன்
உரோமா புரி யாளும்—தருமர்க்
குகந்த புதல்வி யான் சுந்தரி என்
மாதா யிள வயதில்—விட்டு
மரித்திடவே யெனைப் பெற்ற பிதா
புரிந்தார் மறுமணமே—கொடிய
பூதமெனத் தரும் லேனளை
வேட்டை யாடுதற்காய்—தந்தை
விடுத்துச் சென்றாரெனை மாளிகையில்
மாற்றான் தாயெனும்பேய்—என்னை
வருத்திய விதங்களை யாது சொல்வேன்
அடிமை யினுங் கேடாய்—பாவி
ஆட்டிவைத்தாள் குரங் காட்டமெல்லாம்
இரவில்நான் துயில்கையிலே—பொல்லா
எமன்போ லிருவரைத் தூண்டிவிட்டு
அடவிக் கெடுத்துச் சென்று—என்தன்
ஆருயிர் போக்கிட வனுப்பினள் காண்
பெண்ணின் முகம் பார்த்தால்—உடனே
பேயு மிரங்குந் தன்மை போல
கொலைஞ ரெனுயிர் வாங்கா—தங்கக்
குறைவே சென்றகன்று ரதன்பின்
பிலவேர் திரமகிபன்—கண்டு
பிடித்தெனை மணம் புரிந் தார் மகிழ்ந்து
பகைவரை யெதிர்த் தடக்க—எந்தன்
பார்த்திபன் சென்றிருக் கும்பொழுது
பிரசவக் காலங் கிட்டி—பேதை
பெற்றே னிரு கண் மணிகளையே
திருவுளச் செயலி னலே—பர்த்தா

திருமுக மெழுதினர் பயங்கரமே
செல்வ ரிருவரையும்—எனையும்
சிரசாக் கினைசெய் ததின்பின்பே
தம்நகர் வருவதாக—அவர்
தந்தை சிசுவதைமா பாதகமென்
றடவிக் கனுப்பிடவே—யானும்
அகதிக்குத் தெய்வமே துணையென் றுன்னி
தேவ மாதாவை வேண்ட—அம்மன்
திருஷ்டி யளித்தனர் அற்புதமாய்
துணிபட்ட விருகரமும்—வளர்ந்து
தோன்றின முன்போல் அதிசயமாய்
லோக நாயகி புதல்வன்—பாதம்
லோக முழுதும் தினம் இறைஞ்சிடவே

[சங்கதியறிந்தபின் தருமர் லேனுளைக் காளவாயில் போடும்படி உத்தரவளிக்கிருன்.]

## மங்களப்பாட்டு.

### தாரதில்லாறு என்ற மெட்டு.

சந்தத மங்களம் மங்களமே
சங்கிர்த சுபஜெய மங்களமே

1. துங்க தவீது குல மைந்தனுக்கும்
பங்கமறியாப் பர வாசனுக்கும்
பவவினை யகற்றிடப் பரகதி யளித்திட
மரித்தோனுக்கும் ஜெயித் துயிர்த்தோனுக்கும்—சந்தத

2. பூவதில் புகழ் பெரும் ஜார்ஜ் மனனர்க்கும்
காவலன் நாயகி யாம் மேரிக்கும்
நயவள முடனிங்கு நாடின நண்பர்க்கும்
நடிப் போர்க்கும் இதைப் படிப் போர்க்கும்—சந்தத

3. பொன்னைவிடப் பெரிது பாலரின் சொல்
சின்னவன் பொன்னன் கவியைக் கல்
நன்னய முடனிதைப் பயின்ற பெரியோர்க்கும்
சிறியோர்க்கும் கவி உரியோர்க்கும்—சந்தத

ஞானசௌந்தரி நாடகம் முற்றிற்று.

For Copies:

*Please apply to*

**G. P. Williams Esq.,**

*Ponnagaram,*

*MADURA.*